பக்கங்கள் : பன்னிரண்டு

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 13 செவ்வாய்க்கிழமை (29.07.2008)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 244

## வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலய மீள்குடியமர்வு

# இனங்காணப்பட்ட காணிகளை உரியவர்களுக்கு குறித்தொதுக்க உயர்மட்டக்குழு நடவடிக்கை

### நேற்று நடைபெற்ற முதலாவது கூட்டத்தில் விரிவாக ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 29

அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியான வலி - வடக்கில் மீளக்குடியமர விருப்பம் தெரிவித்தவர்களில் அரச அதிபரால் இனங்காணப்பட்டவர்கள், மீளக்குடியமர விருக்கும் இடங்களை, பிரதேச கட்டளை அதிகாரிகளின் பிரசன்னத்தில் வலி - வடக்கு பிரதேச செயலர் நேரில் குறித்தொதுக்குவார். அதனைத் தொடர்ந்து தமது அவதானிப்புச் சம்பந்தமான அறிக்கையை ஓகஸ்ட் 23 ஆம் திகதி அவர் சமர்ப்பிப்பார்.

அந்த அறிக்கையின் அடிப்படையில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவர்.

உயர் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட உயர்மட்டக்குழு நேற்றுக்கூடி இந்தமுடிவை எடுத்துள்ளது.

உயர்மட்டக் குழுவின் முதலாவது கூட்டம், யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா தலைமையில் நேற்றுப் பலாலியில் நடைபெற்றது.

குழுவின் உறுப்பினர்களான யாழ். அரச அதிபர் கே.கணேஷ், யாழ். படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, கடற்படை கட்டளை அதிகாரி கொமடோர் பி.ஏ.டி.சமரசிங்க, வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் டபிள்யூ. எவ்.யூ.பெர்னாண்டோ ஆகியோர் கலந்து கொண்டனர். பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பதவி வகித்த பூஜித ஜயசுந் தர இடமாற்றம் பெற்றுச் சென்றதால், புதிய பிரதி பொலிஸ்மா அதிபர் பெர்னாண்டோ பங்குபற்றினார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# 1,200 வெலிக்கடை தமிழ்க் கைதிகள் நலன் பேண பிரதம நீதியரசர் உத்தரவு

## இ.தொ.கா. தாக்கல் செய்த மனுமீது நேற்றுப் பணிப்பு

கொழும்பு, ஜூலை 29

**வெலிக்கடைச் சிறைச்சாலையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் அவசரகால விதிகளின் கீழ் சுமார் ஆயிரத்து இருநூறு தமிழ்க் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று தெரிவித்துள்ள பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, அந்தக் கைதிகளின் நலன் பேண உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தரவிட்டார்.**

தலைநகர் கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் தமிழர்கள் வகைதொகையின்றிக் கைது செய்யப்படுவதை ஆட்சேபித்து, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி தாக்கல் செய்திருந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனு நேற்று உயர்நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே அவர் இந்த உத்தரவை விடுத்தார்.

இந்த மனு பிரதம நீதியரசர் சரத் என். (12 ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலை அங்கி வவுனியாவில் மீட்பு!

வவுனியா, ஜூலை29

வவுனியா பட்டைகாட்டுப்பகுதியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த தற்கொலை அங்கி ஒன்றை இராணுவத்தினர் மீட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது வெடி பொருள்கள் நிரப்பப்பட்டிருந்த நிலையில் இந்தத் தற்கொலை அங்கி சிக்கியது என்றும் இராணுவத்தினர் தெரிவித்தனர்.

## பாலமோட்டையில் முன்நகர்வு முறியடிப்பு ஐந்து படையினர் பலி; ஏழு பேர் படுகாயம்

### விடுதலைப் புலிகள் அறிவிப்பு

கிளிநொச்சி,ஜூலை29

வவுனியா மாவட்டத்திலுள்ள பாலமோட்டைப் பகுதி ஊடான படையினரின் முன்நகர்வு தங்களால் முறியடிக்கப்பட்டுள்ளது என புலிகள் அறிவித்திருக்கின்றனர். இதில் ஐந்து படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் ஏழுபேர் படுகாய மடைந்துள்ளனர் என்றும் தெரிவித்திருக்கின்றனர்.

பலமோட்டைப் பகுதி ஊடாக நேற்று மாலை 3.35 மணியளவில் படையினர் ஆட்லறி ஷெல் மற்றும் பல்குழல் சூட்டா (12 ஆம் பக்கம் பார்க்க)

## பிள்ளையான் - மன்மோகன் சந்திப்பா? விடவே கூடாது என்கின்றது ஜே.வி.பி!

கொழும்பு, ஜூலை 29

'சார்க்' மாநாட்டில் கலந்துகொள்வதற்காக கொழும்பு வரும் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானையும் சந்திக்கவுள்ளார் என்று ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளரும், எம்.பியுமான விஜித ஹேரத் நேற்றுக் கூறினார்.

இச்சந்திப்பை ஜே.வி.பி. கடுமையாக எதிர்ப்பதாகவும், இச்சந்திப்பு இலங்கைக்குப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் ஜே.வி.பி. நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே விஜித ஹேரத் மேற்படி தகவலை வெளியிட்டார்.

மன்மோகன் சிங் பிள்ளையானைச் சந்திப்பதன் மூலம், கிழக்கு மாகாண சபைத் தேர்தல் இந்தியாவின் உத்தரவுப்படியே நடத்தப்பட்டது என்பதும், இந்தியாவின் உத்தரவுப்படியே பிள்ளையான் முதலமைச்சராக நியமிக்கப்பட்டார் என்பதும் உண்மையாகின்றன -என்றும் விஜித ஹேரத் மேலும் கூறினார்.

கிழக்கில் இந்தியாவின் கை ஓங்கப் போகின்றது என்பதை இச்சந்திப்பு மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது என்றும் அவர் சொன்னார். (சி)

## தேவன்பிட்டி நோக்கி இராணுவம் ஷெல் மழை சிவிலியன் பலி; இருவர் காயம்; வீடுகள் நாசம்

கொழும்பு, ஜூலை29

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மன்னார் தேவன்பிட்டிப் பகுதி மீது நேற்றுமுன்தினம் காலை 7 மணிமுதல் இராணுவத்தினர் மேற்கொண்ட கடும் ஆட்லறி மற்றும் மோட்டார் ஷெல் தாக்குதலில் சிவிலியன் ஒருவர் உயிரிழந்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தரப் பரீட்சை அனுமதி அட்டைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 29

எதிர்வரும் 6ஆம் ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ.(உயர்தர) பரீட்சைக்கான பாடசாலை மற்றும் தனியார் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் நேற்று விமானம் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்குரிய அனுமதி அட்டைகளை இன்று மு.ப10 மணிக்குப் பின்னர் பாடசாலை அதிபர்கள் தத்தமது வலய அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

தனியார் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் இன்று யாழ்ப்பாணம் பிரதம (12 ஆம் பக்கம் பார்க்க)

# உயர்தரப் பரீட்சைக் காலத்தில் மாணவருக்கு இடையூறு இல்லாத வகையில் வாகனத் தொடரணி

### படைத்தரப்பினர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 29

எதிர்வரும் ஓகஸ்ட் 6ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ.(உயர்தர) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு இடையூறு இல்லாத வகையில் படையினரின் வாகனத் தொடரணி இடம்பெறும்.

யாழ்ப்பாண வலயக்கல்விப்பணிப்பாளர்களிடம் இந்த உறுதி மொழியைப் படைத்தரப்பு வழங்கியுள்ளது.

பரீட்சை நடைபெறும் காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று (12 ஆம் பக்கம் பார்க்க)

## குருதிக் கொடையாளர்கள் உயிர்காக்கும் உத்தமர்கள்

(09 ஆம் பக்கமும் பார்க்கவும்)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். பேராலய பீடப்பணியாளர் சபையின் 125 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். தூய மரியன்னை பேராலயத்தின் புனித ஞானப்பிரகாசியார் பீடப்பணியா ளர் சபையின் 125 ஆவது ஆண்டு விழா நாளை புதன்கிழமை மிகவும் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

அன்றைய தினம் தூய மரியன்னை பேராலய அபிஷேகத்தின் 25 ஆவது ஆண்டு யூபிலி நிறைவும், யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் ஆயர் அபிஷேகத்தின் 27 ஆவது ஆண்டு நிறைவும் இணைந்து மும்மடி விழாவாக நடைபெறவுள்ளன.

அன்றைய தினம் காலை 6 மணிக்கு தூய மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் சிறப்பு கூட்டுத் திருப்பலியும், மாலையில் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (1)


## Calling for Tender
## Teaching Hospital, Jaffna.

*Roof to Maternity Ward*

1. The Chairman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed tender for roof to maternity ward, TH, Jaffna up to 10.00am on 09.08.2008. Tenderers form may be collected from Director, TH, Jaffna up to 05.08.2008 on payment on non refundable deposit of Rs. 2,000/

2. Tender will be opened immediately after closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tender or their authorized representative are requested to be present at the opening Tenders.

3. Tender forms are issued only to contractors having valid registration in Grade M7 and above in the field of Building Constructions and other Institute of Constructions Training And Development (ICTAD) criteria and valid membership of National Construction of Contractors Association of Srilanka (NCCASL)

4. Sealed Tender may be despatched either by registered post or hand delivered to Director, Teaching Hospital, Jaffna or deposited in the Tender Box at Teaching Hospital, Jaffna on or before 10.00am on 09.08.2008.

5. Tender Document may be inspected free of charge at the Residence Engineers Office, CECB, Jaffna.

6. For further details please contact Hospital Secretary, TH, Jaffna.

The Chairman,
Divisional Tender Board, Teaching Hospital, Jaffna.


## வெளிவாரி பெறுபேறுகள் வெளியாகின

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்புகள் அலகினால் இறுதியாக நடத்தப்பட்ட பொதுக்கலை பகுதி I இற்கான பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன. இப்பெறுபேறுகளை எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் பட்டப்படிப்புகள் அலகில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் - அத்துடன் இறுதியாக நடாத்தப்பட்ட பொதுக்கலை பகுதி II இற்கான பரீட்சை பெறுபேறுகள் இன்னும் சில தினங்களில் வெளியிடப்படும் எனவும் - வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் கா.குகபாலன் தெரிவித்துள்ளார்.

## உளவளத்துணை ஆசிரியர்களுக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த வழிகாட்டல் ஆலோசனைக்கு பொறுப்பான உளவளத்துணை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும், செயலமர்வும் இன்று காலை 8.30 மணிமுதல் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் உள்ள ஆசிரிய வளநிலையத்தில் நடைபெறும்.

இந்தக் கருத்தரங்கிற்கு காலை 8.30மணிக்கு முன்பதாக ஆசிரியர்களை அனுப்பி வைக்குமாறு அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

## நல்லூர் அதிபர்கள் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 29

நல்லூர் கல்விக்கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் நாளை புதன்கிழமை பி.ப ஒரு மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறும்.

சகல பாடசாலை அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் கேட்டுள்ளார். (1-302-111)


## கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய பரிபாலன சபையின் மூத்த உறுப்பினரும் பரிபாலன சபை உப தலைவருமான வே.பத்மநாதன் அவர்களின் அன்பு மகன்

### பத்மநாதன் தில்லைநடராசன்

அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ காளி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலய பரிபாலன சபை.
உரும்பிராய். (76754)

## மரண அறிவித்தல்கள்

### குழந்தைவேல் நடராஜன்



சிங்கப்பூரை பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேல் நடராஜன் நேற்று (28.07.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் குழந்தைவேலு - சரஸ்வதி தம்பதியரின் மகனும், காசிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், சாவித்திரி (ஜேர்மனி), விஜியகுமார் (ஆஸ்திரேலியா), ரவிக்குமார் (கனடா), காயத்திரி (லண்டன்) ஆகியோரின் தந்தையும், மகாதேவன், வசந்தா, பாமினி, சூரியகுமார் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற இராஜரட்ணம் (ஓய்வுபெற்ற மதுவரி அத்தியட்சகர்), காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் யோகரட்ணம், சகுந்தலா (கனடா), தவமணிதேவி (லண்டன்), விஜியா ஆகியோரின் மைத்துனரும், ஷாளினி, கோகுலன், ஜனனி, அஞ்சலி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

29, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர்.

தகவல்:
மனைவி

(76761)



### பத்மநாதன் தில்லைநடராஜன்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக் கட்டுவனை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் தில்லைநடராஜன் 27/07/2008 ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னார் சறோயினிதேவியின் அன்புக்கணவரும் சுனித்திரா(பிரான்ஸ்), சுபாஜினி(கொலண்ட்), சுதர்சினி (யாழ் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் லியோநாத்(பிரான்ஸ்), மேகலன் (கொலண்ட்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஞ்சனாவின்(பிரான்ஸ்) பேரனும், புஸ்பநாதன்(ஜேர்மனி), மாலதி (ஜேர்மனி) தவபாலன்(நோர்வே), வசந்தி தர்மபாலன்(லண்டன்), தயாளன் (யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்) ஆகியோரின் அருமைச்சகோதரருமாவார் அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28/07/2008 நடைபெற்று பூதவுடல் விலங்கன் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

அருட்சகோதரர் ஆ.ஜஸ்ரின் என்பவரின் அடையாள அட்டை (803191506V)நேற்று (28.07.2008) ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்.நகர் வரும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ்.ஆயர் இல்லத்தில் ஒப்படைக்கவும்.

தொடர்பு:- 222 2161

## எம்புறோடிங் ரை



நீண்டகால பாவனைக்கு உத்தரவாதம்

பாடசாலை மாணவர்களுக்குரிய ரை

69.00 லிருந்து

எஸ். எஸ். யசோதரன் ஆட்ஸ்
212,கோவில் வீதி, நல்லூர்

## உடன் தேவை

சம்பறா 110 CC மோட்டார் சைக்கிள் (MP-MB XXXX) விற்பனைக்குண்டு.

தொடர்பு:- பெ. செல்வரட்ணம்,
107, A9 வீதி, கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.

## History (English Medium)
## English literature

G.C.E. O/L & G.C.E. A/L

Classes Commence on 30.07.2008

Contact:- Director
JAFFNA COLLEGE,
UNDERGRUATE DEPT.
464, Hospital Road, Jaffna.

(#/553884)

## உடன் தேவை

கணக்காளர், சிட்டைஎழுதுநர் மற்றும் புக் பைண்டிங் (கொப்பி கட்டுனர்) அனுபவம் உள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும்.

பேப்பர் ஹவுஸ்,
300,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## 45 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்

தோற்றம்
10 ★ 04 ★ 1937



மறைவு
15 ★ 06 ★ 2008

### திருமதி கண்ணகை கந்தசாமி ஆச்சாரி

45 ஆம் நாள் சென்றும்
ஆறவில்லையம்மா உன் துயரம்
மீண்டும் நீ வாராயோ என
நிதம் ஏங்கித் தவிக்கிறோம்

எமது குலத்தெய்வம் 15.06.2008 இல் சிவபதமடைந்த செய்தி கேட்டறிந்து ஓடோடி வந்து எமது அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்கில் கலந்து கொண்டும், பல வழிகளில் உதவிகள் செய்தும், தொலைபேசி மூலமும், துண்டுப் பிரசுரங்கள் மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியும் மற்றும் எமது அன்புத் தெய்வத்தின் வவுனியாவில் வசிக்கும் சகோதரரின் இல்லத்திற்கு வருகை தந்து அனுதாபம் தெரிவித்தும், எங்களுக்கு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

90, சிவன் கோயில் வடக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
06 ★ 03 ★ 1974



மறைவு
02 ★ 07 ★ 2008

### அமரர் கதிரேசு பாலேந்திரன்

நேற்று வரை எம்முடன் இன்று - நீ
காற்றோடு காற்றாக மறைந்தாயோ - ஐயா
காரிருள் சூழ்ந்த பாரினுள் எம்மையெல்லாம்
தவிக்க விட்டு வானுலகிற் சென்றீரோ - ஐயா
வேரில்லாச் செடிகளாய் ஆடி நிற்கின்றோம்
உன்னை நாம் எங்கு காண்போம் - காற்றிடம்
தூது சொன்னோம்! காற்றாய் வந்து எம் ஈர
விழிகளைத் துடைத்திடாயோ - ஐயா
நீ வருவாய் என்று வழிமேல் விழிவைத்து
உறங்காமல் உன் உறவுகள்...
மரணங்கள் நிச்சயம் ஆனால் நினைவுகள்
என்றும் மரணிப்பதில்லை.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

முல்லைக்கட்டை,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

மனைவி, பிள்ளைகள்,தாய்,
சகோதர, சகோதரிகள், உற்றார்,
உறவினர்கள்.

## University of Jaffna
### Sri lanka

**National Diploma in Technology Aptitude Test 2008/2009**

**Institute of Technology, University of Moratuwa**

The above test will be held on 03.08.2008 Sunday from 9.30a.m to 11.30a.m at the Chemistry Lecture Hall for Jaffna candidates.

Candidates who have applied to sit for the test in Colombo may appear for the above test. Those candidates may check their names in the list available with Senior Assistant Registrar, Examinations, University of Jaffna on or before 31.07.2008.

**University of Jaffna**
**28.07.2008** **Acting Registrar**

## கண்ணீர் காணிக்கை



எமது சக ஆசிரிய மாணவன் ப.ஜெயக்குமார்
அவர்களின் அன்புத் தந்தை
அமரர் தி.பஞ்சாட்சரம்
அவர்களின் இழப்பினால் துயருற்றுத்
தவிக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எம்
கலாசாலை சமூகம் ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆங்கில மன்றம், பலாலி ஆசிரியர்
பயிற்சி கலாசாலை, திருநெல்வேலி.

(76752)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.போதனா வைத்தியசாலையில் தொடர்கதையாக நீண்டு செல்கின்ற நோயாளர்கள் சந்திக்கும் அவலங்கள்

நோய்வாய்ப்பட்டு அவஸ்தையுடன் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் சிகிச்சை பெறப் போகும் இடங்களில் அமைதியான நிலையில் சிகிச்சை பெறுவதே அவர்களின் நோய்கள் குணமடைய முதல் ஏதுவாகும். சிகிச்சை நிலையத்தில் கிடைக்கும் ஆதரவு, வழிகாட்டல், பராமரிப்பு என்பன நோய் மாறுவதற்கு மருந்துகளை விட முதற்படியாகும்.

சாதாரண நோயாளியோ நோய்த்தாக்கம் தீவிரமாகவுள்ள நோயாளியோ சிகிச்சைக்காக செல்லும் இடத்தில் சிரமங்களின்றி சிகிச்சை பெறவேண்டிய மார்க்கங்களை நிறைவுசெய்வது வைத்தியசாலையின் முக்கிய கடனாகும்.

குணதரன்

இந்த நடைமுறைகள் பல வைத்திய சாலைகளில் நாம் எதிர்பார்க்கமுடியாதவையாகவே உள்ளன. இவை தவிர்க்கமுடியாதவையாக அவ்வைத்தியசாலைகளில் அமைந்திருப்பதையே அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

யாழ்.குடாநாட்டின் ஒரேயொரு போதனா வைத்தியசாலையான யாழ்.போதனா வைத்தியசாலையிலும் இந்நிலையே பெருமளவில் காணப்படுவது மிகவும் வருத்தத்துக்கு உரியதாகும். அனுபவம் வாய்ந்த வைத்தியர்களால் மேம்பட்ட சிகிச்சைகள் வழங்கப்படுகின்ற வேளையிலும், கீழ்மட்டப் பணியாளர்களால் அவற்றின் பெறுமதி மறைந்துவிடுமோ என அஞ்சவேண்டியுள்ளது.

சாதாரணமாக வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைபெற வரும் நோயாளர்கள் பல அவலங்களைச் சந்திக்கவேண்டிய நிலை தொடர்கதையாகவே உள்ளது. சிட்டை எடுப்பதிலிருந்து சிகிச்சை பெற்று மருந்து எடுக்கும்வரை அவர்கள் படும் அவலங்கள் சொல்லொணாத் துயரையே அளிக்கிறது.

அதிலும் வயோதிபர்களின் நிலை மிக வேதனைக்குரியது. கடந்த சில வருடங்களுக்கு முன் வெளிநோயாளர் பிரிவில் முதியோர்களுக்கெனத் தனியாக அமைக்கப்பட்டிருந்த சிகிச்சைப்பிரிவு தற்போது நீண்டகாலமாக இயங்காது தடைப்பட்டுள்ளது. இதனால் வயோதிப நோயாளர்களும் எல்லோருடனும் கலந்தே சிகிச்சைபெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அவர்கள் தமது சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள முடியாத அவலநிலையே காணப்படுகிறது. தள்ளாடும் வயதிலும் நீண்ட வரிசையில் நின்றே சிகிச்சை பெறவேண்டிய நிம்மதியற்ற அவலநிலை.

மருந்தகங்களிலும் முதியோர் மருந்து எடுக்கவென எந்த வசதிகளும் மேற்கொள்ளப்படவில்லை. போதியளவு மருந்தாளர்கள் இருந்தபோதும் முதியோர்களும் ஏனையோருடன் நீண்டநேரம் காத்திருந்தே மருந்தைப் பெறவேண்டிய நிலையில் உள்ளனர். இதனால் அவர்களுக்கு இன்னும் நோய்கள் அதிகரிக்கும் அவலநிலையே ஏற்படுவதாக அவர்கள் கவலை தெரிவிக் கின்றனர்.

மக்கள் பிரச்சினையில் உதயன்

போதனா வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவில் அமைக்கப்பட்டிருந்த பொதுசனத் தொடர்புப் பிரிவு கடந்த சில மாதங்களாக மூடப்பட்ட நிலையிலேயே காணப்படுகிறது. இலட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து இதற்கென அமைக்கப்பட்ட கண்ணாடிஅறை மூடு விழாக் கண்டுள்ளது.

மக்கள் நடமாட்டத்தில் திடீர் பிரச்சினைகள் தோன்றும் இக்கால கட்டத்தில், பிரயாணங்களை ஒழுங்காக மேற்கொள்ள முடி யாத நிலையிலும் சில நோயாளர்கள் சிகிச்சை பெறவந்து ஏமாற்றத்தை அடைய வேண்டிய சந்தர்ப்பங்களே அதிகளவில் காணப்படுகின்றன. இதற்கு வைத்தியர்களின் பற்றாக்குறையும் ஒரு காரணமாக அமைந் துள்ளது. வைத்தியசாலைகளில் நோயாளர்களின் கவனிப்பே முதல் முக்கியமானது.

கிளினிக் நோயாளர் பிரிவுகளில் சில உரியவர்களின் கவனயீனத்தால் நோயாளர்களுக்கு விடுமுறை நாள்களிலும் (கிளினிக் இல்லாத நாள்களில்) திகதி வழங்கப்படுவதால் அந்நோயாளர்கள் அந்தத் திகதிகளில் சிகிச்சைக்கெனச் சென்று பெரும் அவலங்களைச் சந்திக்கவேண்டிய நிலையே மிச்சமாகிறது. தாமாக இயங்க முடியாத பல வசதியற்ற நோயாளர்கள் இந்நிலைக்குத் தள்ளப்படுவதனால் துன்பங்களை அனுபவிக்கவேண்டியுள்ளது என கண்ணீர் சிந்துகின்றனர். அவர்கள் மீண்டும் இன்னொரு திகதி எடுப்பதற்குப் பெரும் சிரமங்களை அனுபவிக்கவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதிகளில் தங்கிச் சிகிச்சைபெறும் நோயாளர்களுக்கு வேண்டிய வசதிகள் அமைத்துக்கொடுக்கப்படாததால் பல விடுதிகளில் நோயாளர்கள் பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. கட்டிலருகே "லொக்கர்கள்" பற்றாக்குறையாலும், இருக்கின்ற லொக்கர்களில் பல பாதுகாப்பற்ற நிலையில் அமைந்திருப்பதினாலும் நோயாளர்கள் தமது பொருள்களைப் பாதுகாக்க முடியாமலுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. அடுத்த வேளைக்கென வாங்கி வைக்கப்படும் உணவுகள், பூனைகளால் இழுத்துச் செல்லப்படுகின் றன. இதனால் அவ்வேளை (இரவு) பட்டினியே இருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

கட்டாக்காலி நாய்கள், பூனைகளின் தொல்லை மிக அதிகமாகக் காணப்படுகிறது. விடுதிகளில் பரவலாக அலையும் பூனைகள் நோயாளர்களின் உணவுகளை திருடுவதுடன் மட்டுமல்லாது நோயாளர்களையும் அவர்களது உதவியாளர்களையும் விறாண்டியும், கடித்தும் வருகின்றன.

கட்டாக்காலி நாய்கள் பெருகிக் காணப்படுவதால் நோயாளர்களும், அவர்களது உதவியாளர்களும் மற்றும் வைத்தியசாலைப் பணியாளர்களும் பல கஷ்டங்கள் துன்பங்களை அனுபவிக்கவேண்டியுள்ளது. கடந்த ஒருமாத காலத்திற்குள் சுமார் 15 வைத்தியசாலைப் பணியாளர்கள் இந்தக் கட்டாக்காலி நாய்களால் கடியுண்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

இத்தனைக்கும் மத்தியிலும் சிறு பணியாளர்களின் கட்டாயப்படுத்தலும் சிகிச்சை பெறவரும் நோயாளர்களுக்கு தொல்லைகளை அளித்துவருவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது. விடுதியில் பணிபுரியும் சிறுபணியாளர்கள் சிலர் விடுதியிலிருந்து வீடு திரும்பும் நோயாளர்களிடம் பணம் பெறுவது தொடர்கதையான ஒரு தொல்லையாகவே அமைந்துள்ளது.

விடுதியில் இருந்து சிகிச்சை முடித்து வீடு திரும்பும் நோயாளர்களை ஏற்றிச் செல்லும் சிறுபணியாளர்கள், அவர்களிடம் தாம் ஏற்றிச் செல்வதற்கு பணம் கேட்டு கஷ்டப்படுத்துவதாகவும் அதற்காக கொடுக்கும் தொகை போதாது எனவும் தாம் அவர்களை ஏற்றிச் செல்லும் தள்ளுவண்டியை வாடகைக்கு அமர்த்தியே தாம் கொண்டு வருவதாகவும், வாடகைப்பணம் கொடுப்பதற்கே நோயாளிகள் கொடுக்கும் சிறுதொகைப் பணம் போதாது என்றும் கூறி 100, 200ரூபா என பேரம்பேசிப் பணத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். வசதியற்ற பலர் இதனால் துன் பப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தொல்லைகளை எல்லாம் போக்கி நோயாளர்கள் நிம்மதியாகவும் அவலங்களின்றியும் தமது சிகிச்சையைப் பெற வசதிகளை அமைத்துக் கொடுக்க வைத்தியசாலை நிர்வாகம் ஆவன செய்யுமா என பொதுமக்கள் ஆதங்கப்படுகின்றனர்.

## வன்னியில் பல பாடசாலைகள் மூடப்பட்டதால் இரண்டாம் தவணைப் பரீட்சை ஒத்திவைப்பு

கிளிநொச்சி,ஜூலை29

வன்னியில் இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கை காரணமாக 55 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் இரண்டாம் தவணைப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என கல்வித் திணைக்கள வட்டாரம் தெரிவித்தது.

மன்னார் மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இடம்பெற்று வரும் மோதலால் அப்பிரதேச மக்கள் இடம் பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் தங்கியுள்ளனர்.

இந்நிலையில் மடுவிலிருந்து இடம் பெயர்ந்து வெள்ளாங்குளம் பகுதியில் இயங்கிவந்த மடு வலயப் பாடசாலைகள் வெள்ளாங்குளத்திலும் இயங்கமுடியாது மூடப்பட்டுள்ளன.

மடு வலயக் கல்வித் திணைக்களமும் இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தின் வன்னேரிக்குளத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது. மாணவர்கள் வெவ்வேறு பிரதேசங்களில் இடம்பெயர்ந்து இருப்பதால் பாடசாலைகளைத் தற்காலிகமாகவேனும் இயக்கமுடியாதுள்ளது எனக் கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மடு வலயத்தைச் சேர்ந்த 35 பாடசாலைகளும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 20 பாடசாலைகளுமாக 55 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

இதனால் வன்னிப் பிரதேசத்தில் இரண்டாம் தவணைப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (202)

## அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை29

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பூ.வெற்றிவேலுவின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

## மண்டைதீவுக்கு உணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை29

மண்டைதீவுப் பகுதியில் உள்ள வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு 'டெனிஸ்' நிறுவனம் உணவுப் பொருள்களை வழங்கியுள்ளது.

சமுர்த்தி நிவாரணம் பெறும் பயனாளிகளுக்கே இவை வழங்கப்பட்டுள்ளன. (203-302)

## மண்டைதீவிற்கு புதிய கிராமசேவையாளர்

யாழ்ப்பாணம்,ஜூலை29

மண்டைதீவுக் கிராமத்திற்குப் புதிய கிராமசேவையாளர் நியமிக்கப்பட்டுள்ளார். புங்குடுதீவில் கடமையாற்றிய ஆர்.ரமேஸ் என்பவரே இங்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீண்டகாலமாக இங்கு கிராம அலுவலர் இல்லாததால் அல்லைப்பிட்டி கிராம உத்தியோகத்தர் தனது கடமைக்கு மேலதிகமாக இங்கு இதுவரை கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. (202-302)

## பதவி வெற்றிடங்கள்; விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூலை29

விவசாய அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு விவசாயத் திணைக்களத்தில் நிலவும் விதை தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் சித்திபெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். அத்துடன் தொழில் தகைமைகளாகச் செயன்முறை விவசாய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் 'விவசாயப் பணிப்பாளர் நாயகம், தபால்பெட்டி இல.1, விவசாயத் திணைக்களம், பேராதனை' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 25.07.2008ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம்.

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை29

வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்ப பயிற்சி அமைச்சு தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்திச் செயல்திட்டத்தின் செயல்திட்டப் பொறியியலாளர் பதவிக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் பட்டய அல்லது இணைந்த அங்கத்துவம் அல்லது பொருத்தமான பட்டப்பின் தகைமையுடன் 8 வருட சிரேஷ்ட முகாமைத்துவ அனுபவம் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் 'வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு, 'நிபுணதா பியச', 354/2, அல்விற்றிகல மாவத்தை, கொழும்பு-5' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களை 25.07.2008ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (202)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை29

விவசாய அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு பொருளியல் உதவியாளர் தரம் III பதவிக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட பல்பலைக்கழகம் ஒன்றில் பொருளியல் அல்லது புள்ளிவிவரவியல் அல்லது கணிதம் ஆகிய துறையொன்றில் விசேட பட்டம் பெற்றவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் 'விவசாயப் பணிப்பாளர் நாயகம், த.பெ.எண். 1, பேராதனை என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 25.07.2008ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (202)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை29

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் II 'ஆ' வகுப்பு விரிவாக்கல் உத்தியோகத்தர், ஆராய்ச்சி உதவியாளர் பதவிகளுக்கு ஆள் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியும் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்கள் உட்பட 3 பாடங்களில் சித்திபெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இப்பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. விண்ணப்பங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் 'பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு, வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 25.07.2008ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (202)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை29

சூழல், இயற்கை வளங்கள் அமைச்சு வனத் திணைக்களத்தில் நிலவும் இலங்கை தொழில்நுட்பவியல் சார் சேவைகளின் பயிற்சித் தரத்தில் வட்ட வன அதிகாரி பதவிகளுக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சையில் உயிரியல் அல்லது விவசாயவியல் உட்பட 3 பாடங்களிலோ அல்லது தாவரவியல், விலங்கியல் அல்லது விவசாயவியல் உட்பட 3 பாடங்களில் சித்திபெற்றிருப்பதுடன் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்திபெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை அடுத்தமாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் 'பரீட்சை ஆணையாளர் நாயகம், அமைப்பு முறை மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, பரீட்சைத் திணைக்களம், தபால்பெட்டி எண் 1503, கொழும்பு என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்க பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 25.07.2008ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டுவில் ஆ.நடராசா எழுதிய 'பன்றித்தலைச்சியில் கண்ணகி வழிபாட்டுக் கோலங்கள்' நூல் அறிமுக விழா செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் தலைமையில் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெற்றது.
அந் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை முதலாவது படத்திலும் ஆறுதிருமுருகன் தலைமை உரை நிகழ்த்துவதையும் ஆசியுரையை ஸ்ரீலஸ்ரீ நல்லை ஞானசம்பந்த சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் நிகழ்த்துவதையும் அடுத்த இரண்டு படங்களிலும் காணலாம். நூலின் பிரதியை வெளியீட்டாளர் கா.சிவபாலன் வெளி யிட இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி சி.ஆனந்தி பெற்றுக் கொள்வதை நான்காவது படத்தில் காணலாம். (படங்கள்: நேசன்)

## கண்ணீர்க் காணிக்கை



நல்லூரைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம், சூளானையை வாழ்விடமாகவும் கொழும்பு வெள்ள வத்தையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட

**திருமதி இராசம்மா துரைசிங்கம்**
*(இராசலட்சுமி)*

அவர்கள் (24.07.2008) அன்று கொழும்பில் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அம்பாள் பல்பொருள் வாணிபம்,
271, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2531

**வை.சிவகுமாரன்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி ஜெ.தயாநிதி
அவர்களின் அன்புத் தாய்

**திருமதி ஈஸ்வரி பரமகுரு**

அவர்கள் 24.07.2008 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தமையையிட்டு ஆழ்ந்த கவலையடைவதோடு அவரின் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/வட. இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை.
(சி/553932)


## சிக்கன மின்குமிழ்

60%-80% வரையான மின்சார சிக்கனத்தை ஏற்படுத்தும் உத்தரவாதத்துடன் கூடிய மின் குமிழ்களை (Energy Saving Bulbs) எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**Digital Electronics**
205/7, Raja Theatre Complex,
Kasthuriar Road, Jaffna.

## திருமண சேவை

உங்கள் பிள்ளைகளின் திருமணம் பற்றிய யோசனையா? ஆமாம்! எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் பலவும் உண்டு. உத்தியோகத்தர்கள், தனியார் துறையினர் எனப் பலதரப்பட்ட ஜாதகங்களையும் உங்கள் தெரிவுக்குத் தருகிறோம் நேரில் சந்தியுங்கள்!

த. சிவானந்தன் (பிரபல சோதிடர்)
5, வைமன் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(76696)

## வீடு வாடகைக்கு

சுதுமலையில் Campus,Town இற்கும் அண்மையாக மூன்று அறை புதிய வீடு, வாகன Parking வசதியுடன் கௌரவமான குடும்பத்தினருக்கு நீண்டகால வாடகைக்குண்டு. (Medical Clinic இற்கும் உகந்தது)
T.P:071-5643967, 071-5234379
(76681)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 16 . 02 . 1962



இறப்பு 29 . 07 . 2006

**திருமதி கந்தசாமி ஸ்ரீரஞ்சினி**

ஈராண்டுகள் சென்றதும் உம்மை மறப்போமா அம்மா
எம்மைத் தனியாக விட்டுச்சென்றதன் மாயமென்ன
உம்மை நினைத்து ஏங்கித் தவிக்கின்றோம்
இனி எப்பிறப்பில் உம்முகத்தைக் காண்போம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உம்மை மறவோம்.

தகவல்:
கணவர் - கந்தசாமி
பிள்ளைகள் - க.டர்சிகா, க.லக்சிகா, க.கௌசிகா, க. குயின்சிகா, க. துவாரகா.

புலவர் வீதி,
நவாலி வடக்கு.
(76694)

## இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி



அமரர்
**சின்னமணி தர்மராஜா (தர்மா)**
*(நீர்வேலி ப.நோ.கூ. சங்க முகாமையாளர்)*

மலர்வு 14.07.1979
உதிர்வு 21.07.2006

திதி: 29.07.2008

ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
எம் துயரம் ஆறவில்லை
அழியாத உம் நினைவுகள்
எம்மைத் தினம் தினம் வாட்டுதையா!

இரார வீதி,
கோப்பாய் மத்தி
கோப்பாய்.

*பிரிவால் துயருறும்:*
அப்பா, அம்மா,
சகோதர, சகோதரிகள்.

## சமய சந்நிதிகளில்

நல்லூர், ஜூலை 29

வேலணை வங்களாவடி ஸ்ரீவள்ளி முருகப் பெருமான் ஆலய தேர்த்திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சாட்டி வெள்ளைக் கடற்கரையில் தீர்த்தமும் மறுநாள் சனிக்கிழமை காலை 108 சங்காபிஷேகமும் மாலையில் திருக்கல்யாணமும் இடம்பெறும். (202-111)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 29

தொல்புரம் மேற்கு மன்னதோட்டம் ஜெகஜோதி அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா கடந்த 25ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 4ஆம்திகதி ஆடிப் பூரத்துடன் திருவிழா நிறைவடையும். அன்று சங்காபிசேகமும் இடம்பெறும். (203)

## மரண அறிவித்தல்

**அருளம்மா கந்தையா**



புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் வவுனியா 2 ஆம் லேன் வைரவர் கோயில் சுற்றுவட்ட வீதியை வதி விடமாகவும் கொண்ட அருளம்மா கந்தையா (26.07.2008) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற முருகதம்பி-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, நல்லம்மா, செல்லம்மா மற்றும் செல்லையா ஆகியோரின் சகோதரியும், சத்தியதேவி, கமலாதேவி, காலஞ்சென்ற மகாலட்சுமி மற்றும் பத்மாதேவி, கருணாதேவி, சிறிகிஸ்ண மேனன் (பிரான்ஸ்), புவனதேவி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் சந்திரசேகரம், நாகநாதன், நவரத்தினராசா, கமலராணி (பிரான்ஸ்), கிறிஸ்ரோப்பர் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், வாமதேவன் (ஜேர்மனி), நந்தகுமார் (யாழ்.போதனா வைத்தியசாலை), ரேணுகா (கொலண்ட்), சுபாசினி (ஜேர்மனி), சுதர்சினி (ஜேர்மனி), தயாளநிதி(ஜேர்மனி), அமுத ரஞ்சினி கௌரி (பிரான்ஸ்), நிசாந்தன், நிசாந்தி, கௌசல்யா, மதன், நளினி, சிந்துஜா (பிரான்ஸ்), சுஜீபன்(பிரான்ஸ்), நிரோஜன் (பிரான்ஸ்), கொலின், கொலிசியா ஆகியோரின் பேர்த்தியும், விஜினன், தசாகன், வர்சாஜினி, சுஜின், ரம்யா, சாருஜன், சாரா, சகானா, சுஜானி, நிலானி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (28.07.2008) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வவுனியா தவசிக்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை அனைவரும் [illegible]

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
(76695)
தகவல்: [illegible]

## மரண அறிவித்தல்கள்

**திருமதி**
**கனகாம்பிகை இராமச்சந்திரன்**
(முன்னாள் விடுதிக்காப்பாளர் - பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கனகாம்பிகை இராமச்சந்திரன் நேற்று (28.07.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜகோபால் இராமச்சந்திரனின் அன்பு மனைவியும், ஸ்ரீலவன் (யுனிசெவ்), ஸ்ரீகுகன் (பிரான்ஸ்), வாசுகி (அமெரிக்கா), ஸ்ரீசிவா(பிரான்ஸ்), ஸ்ரீவரதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், சாந்தினி (ஆசிரியர்யா/அருணா சலம் வித்தியாலயம்), ஜெகதா(பிரான்ஸ்), குலநாதன் (அமெரிக்கா), பிரியா (பிரான்ஸ்), சியாமளா (கனடா) ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(29.07.2008) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி மத்தி,
அளவெட்டி.
(சி/553930)
தகவல்:
ஸ்ரீலவன் (செல்வா-மகன்)
(077 9872332)

**பூலோகசிங்கம் வெற்றிவேலு**
(முன்னாள் அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)



"சிவனகம்" நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வாழ்வி டமாகவும் கொண்ட பூலோகசிங்கம் வெற்றி வேலு அவர்கள் 27.07.2008 ஞாயிற்றுக்கிழமை கேகாலையில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Dr.பூலோகசிங்கம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், நாகேஸ்வரி (முன்னாள் ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற லதா மற்றும் அசோகன், குமாரன், இராதாகிருஷ்ணன், செல்வரஜனி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமார், புவனேஸ்வரி, வாசுகி, தா[illegible], முகுந்தன் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற கு[illegible]சாமி மற்றும் செவ்வநாயகி-ஸ்ரீநிவாசன், சுந்தரலிங்கம், வே[illegible]நாயகி- கனகசாபதி, இராசநாயகி-அபயசிங்கி ஆகியோரின் அன்பு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (30.07.2008) புதன்கிழமை கொழும்பில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை [illegible], உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு.
(76683)
தகவல்:
திருமதி ந.சிவராம்
(ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அபிவிருத்தி, புறச் செயற்பாடுகளில் முன்னோக்கி நகரத் தொடங்கியிருக்கும் அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை

யாழ்ப்பாணத்தின் அணியாக விளங்கும் தீபகற்பங்களில் அனலைதீவும் ஒன்றாகும். இது வடபகுதியில் யாழ். மாவட்டத்தின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள தீவுக் கூட்டங்களில் ஒன்றாக அனலைதீவு (ஜே/37, ஜே/38) கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் யா/அனலைதீவு வடலூர் அ.த.க. பாடசாலையானது அமைந்துள்ளது.


உப அதிபர் திருமதி கௌரிகேதீஸ்வரநாதன்

இப்பாடசாலையானது கடந்த வருடங்களில் பல முன்னேற்றகரமான செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் ஏனைய ஆரம்ப பாடசாலைகளைப் போன்று கல்வி அபிவிருத்தி, புறசெயற்பாட்டு அலகுகளில் முன்நோக்கி நகரத் தொடங்கியுள்ளது. இந்தப் பாடசாலையானது ஆரம்ப காலகட்டமாகிய 1930 களில் ஒரு சிறிய ஓலைக் குடிசையாகவே இருந்தது. பின்பு 1959 ஆம் ஆண்டளவில் அரசின் கொள்கைக்கு ஏற்ப அரசினால் பொறுப்பேற்கப்பட்டு அரச பாடசாலையாக இயங்கி வருகின்றது.

இப்பாடசாலையில் உபஅதிபரே பதில் அதிபராகக் கடமையாற்றி வருகிறார். உப - அதிபரான திருமதி கௌரி கேதீஸ்வரநாதன் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரிதும் உழைத்து வருகின்றார். இவர் அனலைதீவைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலையில் தரம் 1 தொடக்கம் தரம் - 5 வரை வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. மொத்தமாக 137 மாணவர்கள் இங்கு கல்வி கற்று வருகின்றனர். 05 நிரந்தர ஆசிரியைகள் மட்டுமே இங்கு கடமை புரிகின்றார்கள். இப்பாடசாலையினது கோட்டக் கல்விப்பணிமனை ஊர்காவற்றுறையிலும், வலயக்கல்விப் பணிமனை வேலணையிலும் அமைந்துள்ளது. கல்வியின் தேவை, ஆசிரியர்களின் தேவை ஆகியவற்றை உணர்ந்து அவற்றினை பூர்த்திசெய்து வருவது குறிப்பிடத்தக்கது.

அனலைதீவினுள் மேலும் இரு பாடசாலைகள் உள்ளன. இதில் தெற்குப் பகுதியில் ஒரு ஆரம்பப்பாடசாலையும், தீவின் மத்திய பகுதியில் தரம் - 6 தொடக்கம் உயர்தரம் (கலை) வரையான வகுப்புக்களைக் கொண்ட இன்னொரு பாடசாலையும் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் வாழ்கின்ற பெற்றோர்களிடம் கல்வி சம்பந்தமான விழிப்புணர்வு சற்றுக் குறைவாக காணப்படுகின்றமையால் மாணவர்களின் கல்வியில் ஓர் உயர்ச்சி நிலையினை எட்ட முடியாத நிலையேற்பட்டுள்ளது. குறிப்பாகத் தரம் - 05 புலமைப்பரிசில் பெறுபேறுகளின் இறுதி இலக்குப் புள்ளியினை எட்டுவதற்கு 10 - 15புள்ளிகள் போதாத நிலையிலேயே இந்தப் பாடசாலை மாணவர்கள் கடந்த இரண்டு வருடங்களிலும் காணப்பட்டனர். இதற்கு மற்றொரு தடையாக, மேலதிக விஷேட வகுப்புகளை நடத்தி, உரிய வினாத்தாள்களைப் பெற்று நகர்ப்பகுதி பாடசாலைகள் போல இங்கு நடைமுறைப்படுத்துவதற்கான நிதிவளம் மிகக் குறைவானதாக உள்ளது. வறுமையின் பிடியில் அன்றாட கூலித்தொழில் மூலம் வருமானம் பெறுகின்ற, நலிவுற்ற குடும்பத்திலுள்ள பிள்ளைகளே இந்தப் பாடசாலையில் அதிகளவில் கல்வி கற்று வருகின்றனர். இதைவிட 10 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பிறப்புச் சான்றிதழ் இல்லாத நிலையில் இப்பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர். எனவே இதில் பெற்றோரது அக்கறையின்மை அது பற்றிய விழிப்புணர்வின்மை போன்றன புறக் காரணிகளாக அமைந்துள்ளன. இருப்பினும் உப அதிபர் சம்பந்தப்பட்ட பெற்றோரைத் தொடர்புடைய திணைக்களத்தின் ஊடாகத் தொடர்புபடுத்தி விரைவில் பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.




## பெற்றோர்களின் அக்கறையின்மை காரணமாக மாணவர்களின் முன்னேற்றம் மந்தகதியில்

இப்பாடசாலையில் காலை 7 மணி தொடக்கம் 8 மணிவரையும் மாலை 2.30 மணி தொடக்கம் 3.30 மணிவரையும் புலமைப்பரிசில் மாணவர்களுக்கும் மெல்லக் கற்றல் மாணவர்களுக்குமான வகுப்புகள் இடம்பெறுகின்றன. இந்த ஆண்டு 17 மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்ற பலபழைய மாணவர்களைக் கொண்ட பாடசாலையாக இப்பாடசாலை அமைந்துள்ளபோதிலும் அவர்களது பங்களிப்பு இருந்தால் பாடசாலையின் அனைத்து விடயங்களும் உயர்நிலையை அடைய வாய்ப்பிருக்கிறது. குறிப்பாகக் கனடா நாட்டில் அனலைதீவு - கனடா அபிவிருத்தி செயற்பாடுகள் மையம் என்ற அமைப்பினை இத்தீவினைச் சேர்ந்தவர்கள் நடத்தி வருகின் றனர். இன்றைய நாட்டுச் சூழலில் ஒரு மாணவனது வாழ்வியலில் கல்வி பாரிய பல மாற்றத்தினை ஏற்படுத்தி வாழ வழி வகுக்கும். எனவே கிராம மக்கள் இது விடயத்தில் சற்று அக்கறையுடன் செயற்பட முனைதல் வேண்டுமென உப - அதிபர் குறிப்பிட்டார்.

விதுஷகி

பொருளாதார ரீதியில் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் உள்ள பொழுதிலும் பெற்றோரது ஒத்துழைப்புடனும் விளையாட்டுப் போட்டி, நவராத்திரி விழா, ஆங்கில தினப் போட்டி, தமிழ்த்தினப் போட்டி, கோட்டமட்ட, வலயமட்ட விளையாட்டுப் போட்டிகள் புதுமுக மாணவர் விழா, ஆசிரியர் தின விழா, போன்ற விழாக்களினை சிறப்பாகக் கொண்டாடி வருகின்றார்கள்.


கோ.விஜீபா

இந்த வகையில் 2008ஆம் ஆண்டு கோட்டமட்ட, வலயமட்ட தமிழ்த்தினப் போட்டியில் இப் பாடசாலை மாணவியாகிய செல்வி கோ.விஜீபா ''இசையும் அசைவும்'' நிகழ்வில் பங்குபற்றி முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டமை இப் பாடசாலைக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகவே அமைகின்றது. மேலும் இப் பாடசாலையானது இவ்வருடம் நடைபெற்ற ஆசிரியர்களுக்கான சித்திரக் கண்காட்சிப் போட்டியிலும், கணித பாடத்திற்கான திறன் விருத்திப் போட்டியிலும் ஆசிரியை செல்வி வனஜா இராசரெத்தினம் தீவக வலய மட்டத்தில் இரண்டாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டமை இப்பாடசாலையினது கற்றல், கற்பித்தல் புறஅலகுகளினது சிறப்பான செயற்பாட்டினைக் காட்டுகின்றது.

வித்தியாலய மெய்வன்மைப் போட்டி நிகழ்வில்


(10 ஆம் பக்கம் பார்க்க)

# அனர்த்த அபாயங்களைத் தவிர்த்துக் கொள்வதற்குப் பாடசாலை மட்டத்தில் விழிப்புணர்வு அவசியம்

அனர்த்த அபாயங்களைத் தவிர்ப்பதற்கான கல்வி விழிப்புணர்வைப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர், பெற்றோர் பொதுமக்களிடையே ஏற்படுத்தல் இன்றைய முதன்மைத் தேவையாகிவிட்டது. ஏனெனில் இயற்கையாகவும், செயற்கையாகவும் அனர்த்தங்களின் பாதிப்பு எமது பிரதேசங்களில் அதிகரித்துவருகின்றது. அத்துடன் எதிர்காலத்தில் பேரனர்த்தங்கள் ஏற்படக்கூடிய பெருமளவு சாத்தியக்கூறுகள் உடைய பிரதேசங்களை உள்ளடக்கிய நாடாக இலங்கை உள்ளதுடன், உலகளாவிய ரீதியில் இத்துறை தொடர்பான விரைவான முன்னெடுப்புக்களும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இங்கு பேரனர்த்தம் என்பது இயற்கை நிகழ்வுகள், அல்லது மனிதர்களின் செயற்பாடுகள் காரணமாக அல்லது விபத்து, கவலையீனம் காரணமாக ஏதாவது ஒரு இடத்தில் ஏற்படும் பாதிப்புகள், பயங்கர நிகழ்வுகள் மிக ஆபத்தான சூழ்நிலைகள் பேரனர்த்தம் எனப்படும். இவற்றின் காரணமாக உயிரிழப்புகள், காயங்கள், சொத்து இழப்புகள் ஏற்படுகின்றன.

***பேரனர்த்த வகைகளாக:***

* **புவி சார்ந்தது** - நிலச்சரிவு, பாறைகள் விழுதல், புவி அதிர்ச்சி.
* **வளி மண்டலம் சார்ந்தது** - புயல், சூறாவளி, இடி - மின்னல்.
* **நீர் சார்ந்தது** - வெள்ளப்பெருக்கு, சுனாமி, கரையோர வெள்ளப்பாதிப்பு, வரட்சி.
* **உயிரியல் சார்ந்தது** - வளியாலும், நிலத்தடி நீராலும் ஏற்படும் கிருமித் தாக்கங்கள்.
* திட்டமிடப்பட்டு அல்லது திட்டமிடப்படாமல் மனிதனால் ஏற்படும் தாக்கங்கள் (யுத்தங்கள், குண்டு வெடிப்புக்கள், தீவிபத்துக்கள், தொழிற்சாலைகளில் நச்சுவாயுக்கசிவுகள், அணு ஆலை பாதிப்புக்கள்

***பின்னணி:***

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் தசாப்தத்தில் மேற்கூறப்பட்ட இயற்கை, செயற்கை அனர்த்தங்களால் பெருமளவிலான மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன. இத்தாக்கமானது உலகில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. எனவே இவ்வாறான தாக்கங்களில் இருந்து எமது உயிரைத் தற்காத்துக் கொள்ளவும், ஏற்படுகின்ற அனர்த்தங்களைக் குறைக்கவும், இடர் அனர்த்த முகாமைத்துவ வழிகாட்டல் அவசியமாகும். இவ் வழிகாட்டல்; சர்வதேச ரீதியாகவும், தேசிய ரீதியாகவும், பிரதேச ரீதியாகவும் விரைவாகமேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


**பா.தனபாலன்**
**உப பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி.**

இந்நிலையில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள்,மாணவர்கள் சமூகத்தில் அதிமுக்கிய பங்கினை வகிப்பதால் இவர்களுக்கு இடர் அனர்த்த முகாமைத்துவம் (Disaster Risk Management) - (DRM) கல்வி வழி காட்டல் இன்றைய தேவையாகவுள்ளது. இவர்களின் ஊடாகவும், ஊடகங்களினூடாகவும் சமூகத்திற்கு விரைவாகவும், மிகவும் துல்லியமாகவும், பொருத்தமாகவும் இடர் அனர்த்த முகாமைத்துவ விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முடியும். இதனால் சமூகம் பாதுகாக்கப்படும். இதற்குப் பாடசாலைக் கலைத்திட்டத்துடன் பின் செயற்பாடுகள் இணைக்கப்படுகின்றன.

* இடர் அனர்த்த எண்ணக்கருக்களை ஏற்படுத்தல் அது தொடர்பான கணிப்பீடும் - மதிப்பீடுகளும், பயிற்சிகளும், ஆய்வுகளும்.
* அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கான பயிற்சிகளையும்,கையேடுகளையும் வழங்குதல். அனர்த்த பாதுகாப்புகுழு அமைத்தல், அனர்த்தத்திற்கு தயார்படுத்தல்.

## பேரனர்த்தங்கள் ஏற்படும் சாத்தியமுள்ள நாடாக இலங்கையும் உள்ளமை இதற்கு ஒரு காரணம்

* இடர் அனர்த்த பாதுகாப்பையும், செயற்பாடுகளையும், முதலுதவிப் பயிற்சிகளையும் அறிமுகம் செய்தல். அவசர கால கல்வி முறைமையை உருவாக்கல்.
* இவற்றுடன் சமூகத்தையும் இணைத்து பாடசாலை - சமூகப் பாதுகாப்பை உறு திப்படுத்தல். ஏனைய நிறுவனங்களுடன் தொடர்பு.
* இடர் அனர்த்தம் ஏற்படா வண்ணம் பாடசாலை - சமூகச்சூழலைத் தயார்படுத்தல், இது தொடர்பான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தல். பேரனர்த்தம் ஏற்பட முன்னாயத்தமாக இருத்தல். அதற்கேற்ற உபகரணங்களைக் கையாளும் தேர்ச்சிகளைப் பெறல்.
* அனர்த்தத்தின்பின்னர் உள்ளநிலைமைகளும், மீள் கட்டுமானமும், புனர்வாழ்வு, உளமேம்பாடு தொடர்பான பயிற்சிகள், செயற்றிட்டங்களை மேற்கொள்ளுதல்.

**வெளிப்படும் எதிர்பார்க்கை**

இடர் அனர்த்த தடுப்பும், பாடசாலை - சமூகப் பாதுகாப்பிற்குமான வழிகாட்டல் போதிக்கப்பட்டு அவை செயற்பாட்டு அனுபவங்கள் வாயிலாக மேற் குறிப்பிட்டவாறு பிரயோகிக்கப்படுவதனால் அவசர நிலைமைகளில் எவற்றைச் செய்ய வேண்டும். எவற்றைச் செய்யக் கூடாது என்பவற்றை அனுபவ வாயிலாக உணர்வதன் மூலம் ஏற்படப் போகின்ற அனர்த்தங்களை இயன்றவரை குறைப்பதும், உயிராபத்துக்களைத் தவிர்க்கவும் முடியும்.

**தீ அனர்த்தத்தின் போது செய்யக் கூடியவை**

01. பதற்றப்படாமல் எச்சரிக்கையை விடுத்து பாதுகாப்பான - வெளியான இடத்திற்குச் செல்லல். உதவி அழைப்புக்களை விடல்.

02. குறித்த இடத்திலிருந்து வெளியேறும் போது கதவு - யன்னல் என்பவற்றைப் பூட்டி செல்ல முன் யாரும் உள்ளனரா என அவதானித்தல்.

03. அதி கூடிய புகை மண்டலப் பிரதேசத்தில் அகப்படும் வேளை தவழ்தலின் ஊடாக முகத்தினை நில மட்டத்திற்கு பதிந்து வெளியேறுதல்.

04. விரைந்து தப்பி ஓடக் கூடிய பாதையைப் பயன்படுத்தல். *(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவரிடத்தே நமது பிரதேச உணவு உற்பத்தி பற்றிய அறிவூட்டலுக்குச் செயற்றிட்டங்களைப் பயன்படுத்தலாம்

பாடசாலைத் தோட்டத்தில் நடப்பட்ட பயிர்கள், பூக்கும் காலத்தில் அல்லது அறுவடைக்குத் தயாராக உள்ள காலத்தில் மாணவரின் பெற்றோரையும் பாடசாலை சார் அயல் சமூகத்தையும் வரவழைத்து விவசாய தினம் ஒன்றை ஒழுங்கு செய்யலாம். இத்தினத்திற்கு வருகைதருவோருக்கு புதிய விளைவுகளை அதிகரிக்கும் பல்வேறு உத்திகளை எடுத்துக் காட்டலாம். அத்துடன் இத்தினத்திற்கு விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் போன்றவற்றின் அதிகாரிகளையும் வரவழைத்து அவர்களுடனான கருத்துப் பரிமாற்றத்திற்கும் சந்தர்ப்பத்தை வழங்கலாம். இச்செயற்பாடுகள் ஊடாக பல்வேறு நவீன கருத்துகள் பலரையும் சென்றடைய வாய்ப்பாக அமையும்.

## உணவு உற்பத்தி வளங்களைப் பயன்படுத்துவதற்குப் பொருத்தமான நவீன தொழில்நுட்பங்களைக் கண்டறிய வேண்டும்

**பொருள்காட்சிகளை ஒழுங்குசெய்தல்**

பாடசாலையில் தவணைக்கொருமுறை அல்லது வருடத்திற்கொரு முறை விவசாயப் பொருள்காட்சியொன்றை நடத்துவதன் மூலம் பாடசாலையைச் சுற்றியுள்ள சமூகத்திற்கு உணவுற்பத்திப் பணி பற்றிய சிறந்த விளக்கத்தை அளிக்கமுடியும். அத்துடன் இக்காலத்தில் பொருள்காட்சிக்கு வருகை தருவோருக்குச் சிறந்த தாவர இனங்களின் வித்துக்கள், நாற்றுக்கள், நடுகைத் துண்டங்கள் என்பவற்றை இலவசமாக அல்லது குறைந்த விலையில் வழங்கி உள்ளூர் உணவுற்பத்திக்கு ஊக்கத்தை வழங்கமுடியும்.

**உள்ளூர் உணவை உட்கொள்ளும் கலாசாரத்தைக் கட்டி எழுப்புதல்**

இன்றுகூட நமது உள்ளூர்ச் சந்தைகளில் நமது உள்நாட்டு உற்பத்திகளைவிட வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களிற்கே அதிக கிராக்கி காணப்படுகிறது. உதாரணமாக நமது பிரதேசத்தில் சிறந்த முறையில் உற்பத்தி செய்து நுகரக்கூடிய பல்வேறு பழ வகைகள் இருந்தபோதும் நாம் இன்றும் அப்பிள், ஒரேஞ்சு என்று கப்பலை எதிர்பார்த்து நிற்கிறோம். எனவே இவற்றைத் தவிர்ப்பதற்கு மாணவர்கள் சிறு வயதிலி

> இக்கட்டுரையின் முதற்பகுதி நேற்றைய உதயனில் வெளியானது

ருந்தே உள்ளூர் உற்பத்திப் பொருள்களை நுகரும் கலாசாரத்தினைப் பாடசாலைகளூடாக உருவாக்கவேண்டும். வெளிநாட்டுப் பழவகைகளுக்கு, பிரதியீடாக உள்ளூர்ப் பழங்கள் பற்றிய விளக்கம், பழவகைகளின் மருத்துவ முக்கியத்துவம், போசாக்கு ரீதியான முக்கியத்துவம் போன்றவற்றையும் எடுத்துக்காட்டி அவற்றின் பால் மாணவரையும் அவர்சார்ந்த சமூகத்தையும் கரிசினை கொள்ளச் செய்யலாம்.

இலங்கையில் 2006ஆம் ஆண்டு மட்டும் 13 லட்சம் மெற்றிக்தொன் கோதுமை மா வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து நுகரப்பட்டுள்ளது. இதற்கு நாடு இருபதாயிரம் மில்லியன் ரூபாவிற்கு மேலான பணத்தைச் செலவு செய்துள்ளது. எனவே கோதுமை மாவிற்கு பிரதியீடாக நமது பிரதேசத்தில் உற்பத்தியாகும் அரிசி, சிறுதானியம் கொண்டு உருவாக்கும் உணவுப் பண்ட வகைகளை செய்கை ஆக்கும் நுட்பங்களை மாணவருக்கு அறிமுகப்படுத்தி, சமூகத்தில் இவ்வுணவு வகைகளைப் பிரபல்யப்படுத்தலாம். இதன்மூலமும் உள்ளூர் உணவுப் பொருள்களை நுகரும் செயற்பாடு மேம்பாடடையும்.

**பல்வேறு சர்வதேச தினங்களையும் கொண்டாடுதல்**

சர்வதேச ரீதியில் பிரகடனப்படுத்தப்பட்ட உணவுற்பத்தியை மேம்படுத்தும் தினங்களையும் பாடசாலைகள் தமது இயல் அளவிற்கேற்ப கொண்டாடலாம். குறைந்தது அன்றைய நாளில் குறித்த தினத்துடன் தொடர்புடைய ஆற்றலுடையவரைக் கொண்டு ஒரு கலந்துரையாடலையாவது ஒழுங்குசெய்து கொள்ளலாம்.

**உணவுற்பத்தியை மேம்படுத்தும் வகையில் கொண்டாடத்தக்க சில தினங்கள்**

மார்ச் 15 - அகில உலக நுகர்வோர் தினம்
ஏப்ரல் 17 - சர்தேச விவசாயிகளின் புரட்சிச் செயற்பாட்டுத் தினம்
மே 22 - உலக உயிரின பல்லினத்துவ தினம்
ஜூன் 05 - உலக சூழல் தினம்
ஜூன் 17 - ஐக்கிய நாடுகள் பாலைவன மாதல் மற்றும் வரட்சி இல்லா தொழிக்கும் தினம்
ஒக்ரோபர் 16 - உலக உணவு தினம்
ஒக்ரோபர் 17 - சர்வதேச வறுமை ஒழிப்புத் தினம்
டிசெம்பர் 05 - சர்வதேச கிருமிநாசினி எதிர்ப்புத் தினம்

**வாழ்க்கைத் தகைமை விருத்திச் செயற்றிட்டங்களைப் பயன்படுத்துதல்**

1997ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் தரம் 12, 13 மாணவர்களுக்கான பாடசாலை மட்டத்தில் வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டமானது ''வாழ்க்கைத் தகைமை விருத்திச் செயற்றிட்டம்'' என அழைக்கப்படுகிறது. இச்செயற்றிட்டத்தின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு நான்கு வகைச் செயற்றிட்டங்களில் மாணவர் ஈடுபடுவர். அவை ஆய்வுச் செயற்றிட்டம், ஆக்கவகைச் செயற்றிட்டம், பிரச்சினை வகைச் செயற்றிட்டம், பொருளாதார ரீதியில் பயனுறுதிமிக்க செயற்றிட்டம் என மேற்கொள்ளப்படுகின்றன. இச்செயற்றிட்டங்களை மாணவர் தெரிவுசெய்யும்போது உணவுற்பத்தியை அதிகரிக்கும் செயற்றிட்டங்களிற்கு ஊக்கம் வழங்கும்போது அவை நாட்டிற்கும் மாணவனிற்கும் பயனுறுதி மிக்கதாக அமையும்.

*இச்செயற்றிட்டங்கள் மூலம்:*

(அ) பிரதேசத்தில் காணப்படும் உற்பத்தி மூலங்கள், அவற்றைப் பயன்படுத்துதல் பற்றிய அறிவை விருத்தி செய்யலாம்.

(ஆ) எமது தேவைக்கேற்றவாறான உணவுற்பத்தி வளங்களைப் பயன்படுத்துவதற்குப் பொருத்தமான தொழில்நுட்பத்தை இனங்காணலாம்.

(இ) உணவுற்பத்தியில் ஏற்படும் இடர்பாடுகளைக் களைந்து தாமும் உணவுற்பத்தியை மேற்கொள்ள மாணவர் திடசங்கற்பம் பூணுவர்.

(ஈ) கிராமிய ரீதியில் காணப்படும் உயர் தொழில்நுட்பங்களை இச்செயற்றிட்ட ஆய்வு மூலம் வெளிக்கொண்டு வரலாம்.

எனவே மேற்கூறிய நோக்கங்களை எய்தும் வகையில் க.பொ.த. (உ/த) இல் பயிலும் மாணவருக்கு ஒப்படைகளை வழங்கியும், நாட்டின் உணவுற்பத்திக்கு நம்மாலியன்ற பங்களிப்பைச் செய்யமுடியும்.

**இளைஞர்கள் உள்ளூர் உணவுற்பத்தியில் ஈடுபடுவதை ஊக்குவித்தல்**

இன்றைய இளைஞர்கள் உடை கசங்காத தொழிலையே மேற்கொள்ள ஆர்வமாக உள்ளனர். கடின உடல் உழைப்பு மூலம் வருமானம் பெறும் தொழிலை நாடுவதில்லை. பாடசாலையானது மாணவரை எத்தொழிலிலும் ஈடுபடத்தக்க நற்பிரஜையாக உருவாக்க வேண்டும்.

பாடசாலைகள் மாணவனை பயிர்ச்செய்கை, விலங்கு வளர்ப்பு, மீன்பிடி போன்ற முயற்சிகளில் ஈடுபடுத்தி அவனின் பட்டறிவை மேம்படுத்துவதுடன், இத்தொழில்கள் இழி தொழில்கள் அல்ல என்பதனை மனங்கொள்ளச் செய்யவும் வேண்டும்.

ஒவ்வொரு பாடசாலையும், ஒவ்வொரு மாணவனும், ஒவ்வொரு தனிமனிதனும் தன்னாலியன்ற உணவுற்பத்தி முயற்சியில் ஈடுபடவேண்டும். குறைந்தது தாமே தமக்குரிய மரக்கறி, பழங்களையாவது உற்பத்தி செய்து உண்ணவேண்டும். வெற்றுநிலங்கள் எங்கனும் பயிர்செய்து நாட்டைப் பசும் போர்வையாக்கவேண்டும்.

வீட்டுக் கழிவுகளையும் தோட்டக் கழிவுகளையும் கூட்டெருவாக்கி மண் வளத்தை மேம்படுத்தவேண்டும். இவ்வாறாக நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் சிந்தித்து இதனை தமது தலையாய கடமையாகக் கொண்டு செயற்பட்டால், எமது பிரதேசத்தை சுபீட்சமிக்கதாகக் கட்டியெழுப்பமுடியும். *

*(முற்றும்)*

ப.அருந்தவம்,
ஆசிரிய ஆலோசகர்,
வலிகாமம் கல்வி வலயம்.

# வடமராட்சி வலய மட்டத்தில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டிகளின் முடிவுகள்

கரவெட்டி, ஜூலை29

வடமராட்சி வலய மட்டத்தில் இடம் பெற்ற தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டிகளில் வெற்றியீட்டியோரில் ஒரு பகுதியினரின் விவரம் நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது. ஏனையோரின் விவரம் வருமாறு:-

**பேச்சு**

*பிரிவு-1:* இ.லோஜிதன் - தம்பசிட்டி மெ.மி.த.க. பா., சிதம்பரநாதன் சுமணன் - கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி., வல்லிபுரநாதன் சங்கீர்த்தனா - நெல்லியடி மெ.மி.த.க.பா.

*பிரிவு-2:* முருகானந்ததாஸ் பாவலன் - ஹாட்லிக் கல்லூரி, நிர்த்தனா விமலராசா - விக்னேஸ்வராக் கல்லூரி, பாலாஜினி பாலசிங்கம் - வடமராட்சி ம.ம.கல்லூரி.

*பிரிவு-3:* தனபாலசிங்கம் கோகுலன் ஹாட்லிக் கல்லூரி, தியாகராசா கலைவாணி - வடமராட்சி ம.கல்லூரி, இராமநாதன் ஸ்ரீதிவாகரன் - நெல்லியடி ம.ம.வி.

*பிரிவு-4:* வல்லிபுரநாதன் சுஜீவன் - ஹாட்லிக் கல்லூரி, திவ்யா ஜெயக்குமார் - வடமராட்சி ம.ம.கல்லூரி, பிரியா விஸ்வலிங்கம் - நெல்லியடி ம.ம.வி.

*பிரிவு-5:* கனகசிங்கம் சிவசுதன் - ஹாட்லிக் கல்லூரி, மதுரா பாலசுப்பிரமணியம் - மெதடிஸ்த பெ.உ.பா., உருத்திரசிவ கணேசமூர்த்தி பிரணவதர்சன் - நெல்லியடி ம.ம.வி.

**பாவோதல்**

*பிரிவு-1:* வைஷ்ணவி பிரதீபன் - கர. மாணிக்கவாசகர் வித்தி, செளமியா ரவீந்திரன் - கரணவாய் பொன்னம்பலம், வ.மாதுமை - வடஇந்து மகளிர் கல்லூரி.

*பிரிவு-2:* ஜெயசுதா லிங்கரட்ணம் - நெல்லியடி ம.ம.வி., இ.ஜலனி - மெதடிஸ்த பெ.உ.பா., தர்சினி நகுலேஸ்வரன் - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, செ.சிந்துராணி - வடஇந்து மகளிர் கல்லூரி.

*பிரிவு-3:* சாமந்தி நித்தியானந்தன் - நெல்லியடி ம.ம.வி., கோ.வைதேகி - வட இந்து மகளிர் கல்லூரி, விதுர்ஷா பழனித்துரை - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

*பிரிவு-4:* ஜெயகௌரி பொன்னுத்துரை - வடஇந்து மகளிர் கல்லூரி, அ.ராஜினி - பரு.சித்திவிநாயகர், சி.சிவசேகரன் - அம்பன் அ.மி.த.க.ப.

*பிரிவு-5:* விஜிதா பொன்னுத்துரை- மெதடிஸ்த பெ.உ.பா, க.ஜெயராதை- தொண்டைமானாறு வீ.ம.வி, மதுரா அன்னலிங்கம்- வடஇந்து மகளிர் கல்லூரி.

**இசையும் அசைவும்**

*பிரிவு-1:* சர்மினி அகிலதாஸ்- நெல்லியடி மெ.மி.த.க, சிவபாதசுப்பிரமணியம் அபினயா-கரவெட்டி மாணிக்கவாசகர், ஜெதுர்சனா ஜெயரட்ணம்-வதிரி திரு இருதயக் கல்லூரி

*பிரிவு-2:* ஸ்ரீகாந்தன் விதுசன்-நெல்லியடி ம.ம.வி, சஞ்சிகா பாஸ்கரன்- வடமராட்சி ம.ம.வி, காயத்திரி கணேசமூர்த்தி- விக்கேஸ்வராக் கல்லூரி

*பிரிவு-3:* சிவலிங்கேஸ்வரன் நிதர்சன்- ஹாட்லிக் கல்லூரி, வைதேகி குமாரசாமிக் குருக்கள்-வடமத்திய மகளிர் கல்லூரி, தர்சிகா தங்கராசா- நெல்லியடி ம.ம.வி.

**இசை - தனி**

*பிரிவு-4:* சத்தியமூர்த்தி கபாஸ்கர்- ஹாட்லிக் கல்லூரி, கோபிகா செல்வக்குமரன் - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, கம்ஷவதி ஜெகதீஸ்வரன்- வடமத்திய மகளிர் கல்லூரி.

*பிரிவு-5:* செல்வராசா செல்வரஜீவன்- ஹாட்லிக் கல்லூரி, தர்சிகா ஸ்ரீதரன்- விக்னேஸ்வராக் கல்லூரி, அர்ச்சனா விக்னேஸ்வரன்-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**இசை (குழு)**

*பிரிவு-1:* ஹாட்லிக் கல்லூரி, உடுப்பிட்டி அ.மி.க., பொலிகண்டி இ.த.க.பா.

*பிரிவு-2:* உடுப்பிட்டி அ.மி.க., வட இந்து மகளிர், விக்னேஸ்வராக் கல்லூரி.

**நடனம் (தனி)**

*பிரிவு-1:* அபிஷேகா தவேந்திரன்- நெல்லியடி மெ.மி.த.க, இலக்கியா ரவிச்சந்திரன்- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, ஜெ.ரஜிந்தினி- வடஇந்து மகளிர்கல்லூரி

*பிரிவு-2:* துஷானி கிருஸ்ணாகரன்- வடமத்திய மகளிர் கல்லூரி, கஜானி கிருஸ்ணகுமார் - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வெண்ணிலா முரளி- வடஇந்து மகளிர் கல்லூரி.

*பிரிவு-3:* ஷாகிர்த்தியா ஸ்ரீஸ்குமார்- நெல்லியடி ம.ம.வி, ஜீவிதா அப்புத்துரை- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, கிருசாயினி கருணாகரன் - வடஇந்து மகளிர் கல்லூரி.

*பிரிவு-4:* ஜோய்ஸ் கீர்த்திகா வேதநாயகம்-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, நிவேதிகா அமிர்தராசா-தொண்டைமானாறு வீ.ம.வி.

*பிரிவு-5:* அபிநயா நடராஜா- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, கௌதமி கிருஸ்ணபாலன்- மெதடிஸ்த பெண்கள் உ.பா.

**நடனம் (குழு)**

*பிரிவு-1:* மெதடிஸ்த பெ. உ.பா, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வடமராட்சி ம.ம.க.

**நாட்டிய நாடகம் (தி.போ)**

*பிரிவு-2:* மெதடிஸ்த பெ.உ.பா, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**நாடகம் (தி.போ)**

ஹாட்லிக் கல்லூரி, பரு.சித்தி விநா. வித்தி,தேவரையாளி இந்துக் கல்லூரி.

**வில்லுப்பாட்டு (தி.போ)**

கற்கோவளம் மெ.மி.த.க.பா, விக்னேஸ்வரக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி.

**விவாதம்**

விக்னேஸ்வரக் கல்லூரி, நெல்லியடி ம.ம.வி, யா/ஹாட்லிக் கல்லூரி.

**தமிழறிவு வினாவிடைப் போட்டி**

விக்னேஸ்வரக் கல்லூரி, ஞானசாரியார் கல்லூரி, வடமத்திய மகளிர் கல்லூரி.

**நாட்டுக் கூத்து**

வட இந்து மகளிர் கல்லூரி.

**சிந்துநடை**

மாதனை மெ.மி.த.க, இமையாணன் அ.த.க.பா.

**இசைநாடகம்**

மெதடிஸ்த பெண்கள், கற்கோவளம் மெ.மி.த.க, விக்னேஸ்வரக் கல்லூரி.

**தென்மோடி**

சிதம்பரக் கல்லூரி. (203-70)



யாழ். திருமறைக் கலாமன்றம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்திய 'ஈழத்து இசை நாடக மரபு' என்னும் கருத்தரங்கு நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள். நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை முதலாவது படத்தில் காணலாம்.

திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.ராஜ்குமார், [illegible] ஆகியோர் கருத்துரை நிகழ்த்துவதை அடுத்துள்ள படங்களில் காணலாம். *(படங்கள்: நம்பி)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளிகள்தான் பிள்ளைகளின் கற்றல் மேம்பாட்டுக்கு அடித்தளம் கற்பித்தலில் ஈடுபடுவோர் அதனை நற்பணியாகக் கொள்ளவேண்டும்

## பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஜூலை29

முன்பள்ளிகள்தான் பிள்ளைகளின் கற்றல் மேம்பாட்டுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுக்கின்றன. சிறார்களின் ஆரம்பக் கல்விக்கு அத்திவாரமாக விளங்கும் முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள், நிர்வாகிகள் ஆகியோரும் ஒன்றிணைந்து நற்பணியென்று எண்ணி செயற்படுவது மிக மிக அவசியமானது.

கோண்டாவில் நாராயணா பாலர் பாடசாலை பாலர் விளையாட்டுப் போட்டியின் போது முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சு.சந்திரதேவி இவ்வாறு தெரிவித்தார்.

நிலையத் தலைவர் கோ.நரேந்திரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்:

''ஆயிரம் அன்னசத்திரம் நாட்டலிலும் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் மேலாம்'' என்றோதிய பாரதியாரின் பாட்டுக்கு ஏற்ப பிள்ளைகளுக்கு கல்வியை ஊட்டும் ஆசிரியர்கள் என்றும் மேலானவர்கள்.

அதிலும் பாலர்களுக்கு கல்வி புகட்டும் முன்பள்ளி ஆசிரியர்களின் கடமை உணர்வும், கற்பிக்கும் திறனும் என்றும் போற்றப்படவேண்டிய ஒன்று.

இருந்தும் அவர்களுக்கு வழங்கப்படும் வேதனம் மிகக்குறைவு.

முன்பள்ளியை இயக்குவோரும் பெற்றோரும் அக்கறை கொண்டு ஓரளவுக்கேனும் ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க முன்வரவேண்டும்.

வளரும் சிறார்களுக்கு தேகாரோக்கியம் மிகவும் இன்றியமையாதது.

கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடவும் ஆளுமை உள்ள பிள்ளைகளாக உருவாக வேண்டும் என்பதற்காக சத்துணவுத் திட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

உள்ளூராட்சி சபைகளின் அனுசரணையோடு ''போரூட்'' நிறுவனம் சத்துணவுத் திட்டத்துக்கு உதவி வருகின்றது. இத்திட்டம் பிள்ளைகளின் உள உடல் வளர்ச்சிக்கு பெரிதும் உதவும்.

இங்கு இடம்பெற்ற பாலகர்களின் விளையாட்டுக்கள் மிகவும் சிறப்பாக இருந்தன. பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு மட்டுமன்றி விளையாட்டிலும் அக்கறை கொண்டு இங்கு வந்து கூடி நிற்கும் பெற்றோர்கள், சகோதரர்கள், பேரன், போர்த்திகள் ஒன்றாய் நிற்பது மன நிறைவைத் தருகின்றது.

இப்படியே தொடர்ந்து மழலைகளின் வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்படுவீர்கள் என நம்புகின்றேன்- என்றார். (203)

## செய்திமடல் வெளியீடும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், ஜூலை29

மானிப்பாய் பிரதேச சபையின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு 'சேவை பெறுநருக்குக்காய்' செய்திமடல் வெளியீடும் சிறப்புக் கண்காட்சியும் நடத்தப்படவுள்ளன.

நாளை காலை 9.30 மணிக்கு புதன்கிழமை கண்காட்சி மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயத்திலும் செய்திமடல் வெளியீடு மானிப்பாய் கலாசார மண்டபத்திலும் இடம் பெறவுள்ளன.

பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள செய்திமடல் வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்து கொள்வார். (203)




## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் தமிழ்விழா

யாழ்ப்பாணம், ஜூலை29

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழ்விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரிக் கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

செ .தர்மராஜ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜாவும் சிறப்பு விருந்தினராகக் யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) திருமதி மீரா அருள்நேசனும் கலந்து கொள்வர். (203)

# காரைநகர் பிரதேச அபிவிருத்திக்கு 7 லட்சத்து 75 ஆயிரம் ரூபா நிதி

யாழ்ப்பாணம், ஜூலை29

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இவ்வாண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தின் கீழ் 7 இலட்சத்து 75ஆயிரம் ரூபா செலவில் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

காரைநகரில் உள்ள 11 விளையாட்டுக் கழகங்களுக்கும் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கல், காரை மத்தி அம்பாள் கடற்றொழிலாளர் சங்கத்திற்கு தளபாடக்கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும்-

காரை மத்தி முதியோர் பகல் பராமரிப்பு நிலையத் தளபாடக் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும், காரைநகர் சிவன் கோயில் மூன்றாம் வீதியின் தெற்குப் பகுதி புனரமைப்பிற்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும்-

பிட்டியெல்லை, ஊரி மாதர் அபிவிருத்தி சங்கங்களுக்கு தையல் இயந்திரம் கொள்வனவு செய்ய தலா 50 ஆயிரம் ரூபாவும், பெரியமணல் கிராம அபிவிருத்திச் சங்க கூட்டத்திற்கு மின்னிணைப்பு மேற்கொள்வதற்கு 50 ஆயிரம் ரூபாவும், சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய கட்டப் புனரமைப்புக்கு 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(202-250)




ஹற்றன் நஷனல் வங்கியின் நெல்லியடிக் கிளையின் நான்காவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட இரத்ததான நிகழ்வில் வங்கியாளர்கள், வாடிக்கையாளர்கள் எனப் பலரும் இரத்ததானம் செய்தனர்.

இரத்ததானம் இடம்பெறுவதையும் வங்கி முகாமையாளர் ப.சங்கர், யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர் ப.சிவதீபன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (203)

ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கு

# தகவல் தொடர்பாடல் பாடம் கற்பிப்பதற்கு தகுதியானோரிடம் விண்ணப்பம் கோரல்

அச்சுவேலி, ஜூலை29

ஜி.சீ.ஈ.உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு ''தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம்'' பாடத்தை கற்பிப்பதற்கு தகுதியான ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களில் கீழ்க் காணும் தகைமை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தமது விண்ணப்பங்களை தமது வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கீழ்க்காணும் தகைமை உடையவர்கள் வலயக் கல்வி அலுவலகங்களினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தின் மாதிரியை ஒத்த படிவத்தின் மூலம் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்:

* கணனி விஞ்ஞானம், தகவல் தொழில் நுட்பம், தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் ஆகிய கற்கை நெறிகளில் பட்டம் பெற்ற ஆசிரியர்கள்.
* கணனி விஞ்ஞானத்தை அல்லது தகவல் தொழில்நுட்பத்தை அல்லது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பட்டப்படிப்பின் ஒரு பாடமாக கொண்ட பட்டதாரி ஆசிரியர்கள்.
* பல்கலைக்கழகம், இலங்கை உயர் தொழில் நுட்ப நிறுவகம் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களில் கணனி தொடர்பான பட்டப்பின் டிப்ளோமா அல்லது டிப்ளோமா பட்டம் பெற்ற ஆசிரியர்கள்.
* மேற்படி பட்டம் எதுவும் அற்ற ஆனால் விதந்துரைக்கப்பட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்தை கற்பிக்கக் கூடிய திறமையுள்ள ஆசிரியர்.

குறிப்பிட்ட பாடத்துறைக்கான ஆசிரிய ஆளணி நேர்முகப்பரீட்சை உள்ளிட்ட தகுதி காண் தெரிவுகள் ஊடாக கண்டறியப்பட்டு வலய ரீதியில் தெரிவு செய்யப்பட்டு உயர்தர வகுப்புகள் உள்ள பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர். (203-11)

# நல்லூர் ஆலயப் பெருந்திருவிழாக் காலங்களில் சைவ ஒழுங்குமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்

## மாநகர ஆணையாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 29

நல்லூர் ஆலய பெருந்திருவிழா காலத்தில் அடியார்கள் சைவஆசார சீலர்களாக ஒழுங்கு விதிமுறைகளை உரிய வகையில் கடைப்பிடிக்க வேண்டும் என்று யாழ். மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் தனது கோரிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

நல்லூர் ஆலயப் பெருந்திருவிழா எதிர் வரும் 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 25 நாள்கள் நடைபெறவுள்ளது. திருவிழா காலத்தில் அடியவர்கள் சைவ ஆசாரத்தையும் விழா ஒழுங்கு விதிமுறைகளையும் உரிய வகையில் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆலய வீதிகளில் திருவிழாக் காலங்களில் புனிதத் தன்மை பேணப்படுவது அவசியம்.

போக்குவரத்து ஒழுங்குகளை சீரான முறையில் நடத்துவதற்கு சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ், சாரணர் அமைப்புகள் போன்றன கடமையில் ஈடுபடும்.

பொதுச் சுகாதாரப் பகுதியினர், வைத்திய சேவைப் பிரிவினர், நீர் வழங்கல் பிரிவு, தீயணைப்புப் பிரிவு ஆகியவற்றினது ஒத்துழைப்பும் பெறப்பட்டுள்ளது.

ஆலய வீதிகளில் சைக்கிள், மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்கள் நிறுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

ஆலய வீதிகளில் வசிப்பவர்களுக்கு வழக்கமாக இடம்பெறுவது போன்று இந்த முறையும் 'பாஸ்' நடைமுறை செய்யப்படும்.

வாகனப் போக்குவரத்து மாற்று பாதை ஊடாக நடத்தப்படும். வாகனச் சாரதிகள் இந்த ஒழுங்கு விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் - என்று தெரிவித்துள்ளார். (203-302)

## கலைப்பிரிவு மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

நவாலி, ஜூலை29

நவாலி வை.எம்.சி.ஏயில் இன்று தொடக்கம் எதிர்வரும் திங்கட்கிழமை வரை ஜி.சீ.ஈ உயர்தரகலைப்பிரிவு மாணவர்களுக்கு காலை 8.30மணி தொடக்கம் வழிகாட்டல் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

அனைத்து மாணவர்களையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-100)







காரைநகர் அபிவிருத்திச் சபை, கனடா காரை கலாசார மன்றத்தின் ஆதரவுடன் தியாகராஜா ம.ம.வியில் நடத்திய மாணவர் கௌரவிப்பு நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.

விருந்தினர்கள் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்படுவதை [illegible] சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐ.புவனேந்திரன் மங்கள விளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் திறமைச் சித்திபெற்ற யாழ்ரன் கல்லூரி மாணவன் சி.றமேசிற்கு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பரிசில் வழங்குவதை மூன்றாவது படத்தில் காணலாம். (250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் நாடித்துடிப்பை உணர்த்துபவையாக கலை இலக்கியங்கள் மிளிர வேண்டும்

## நாடகத்துறைப் புலமையாளர் சண்முகலிங்கம் கூறுகிறார்

இணுவில், ஜூலை 29

ஒரு காலத்தின் நாடித்துடிப்பை உணர்த்தும் ஒன்றாகக் கலை இலக்கியங்கள் மிளிர வேண்டும். மிக நீண்ட காலத்தின் பின்னரும் இலக்கியங்களைப் படிப்பவர்கள் அவை எழுந்த காலச் சூழ்நிலைகளைத் தெரிந்து கொள்பவையாகவும் அவை விளங்கவேண்டும்.

இவ்வாறு நாடகத்துறைப் புலமையாளரான கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் தெரிவித்தார்.

க.ஸ்ரீகந்தவேள் எழுதிய 'தேரார் வீதியில்' என்னும் நூலின் வெளியீட்டு விழா அண்மையில் இணுவில் அறிவாலயத்தில் நடைபெற்றது.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் க.சிவாஜி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகை யிலேயே சண்முகலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தொடர்ந்துஅவர்உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

நாம் ஒருவரை அளவுக்கு விஞ்சிப் புகழ்வது அவரைத் தலைகால் புரியாதவராக ஆக்கிவிடக்கூடாது. அந்தப் புகழுரையை அவர் தனது துறையில் தொடர்ந்தும் ஆழமாக இறங்குவதற்கான ஊக்குவிப்புக்களாகக் கொள்ளவேண்டும்.

நாடக ஆசிரியன் எதைக்கருதுகிறானோ அதைத்தான் அந்த நாடகம் பேசி நிற்கும் முழுமையான கருத்து என்பதில்லை. அந்த நாடகம் நடிக்கப்படும்போது அது எழுதியவருடைய நாடகமாக அல்லாமல் பார்ப்பவருடைய நாடகம் ஆகிவிடுவதால் அதற்குப் பல கருத்துக்கள் உருவாகின்றன - என் றார்.

தொடக்கவுரை ஆற்றிய இணுவில் கலை இலக்கிய வட்டத் தலைவர் த.சிவகுமாரன் தனதுரையில் - புதிய நாடகங்களே போட்டியிடலாம் என்ற விதிமுறை இருப்பதால் பாடசாலை நாடகக்களத்தில் இருந்துதான் புதிய புதிய நாடகங்கள் வெளிவருகின்றன. இன்று நாடகத்துறையில் புகழ்பெற்ற மௌன குரு, குழந்தை ம.சண்முகலிங்கம் ஆகியோரும் பாடசாலை நாடகங்களிலிருந்து முகிழ்ந்தவர்கள்தான். இவ்வாறான வளர்ச்சி இன்றும் தொடர்ந்து வருகின்றது - என்றார்.(202- 55)

## வைத்திய நிறுவனங்களின் பணியாளர்களுக்கு நடமாடும் சேவை

இணுவில், ஜூலை 29

யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களம் யாழ்.மாவட்டத்திலுள்ள வைத்திய நிறுவனங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் அலுவலகம் தொடர்பான பிரச்சினைகள், தேவைகள் மற்றும் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் காணப்படுகின்ற சுகாதாரக் குறைபாடுகள் குறித்து நடமாடும் சேவையை நடத்திவருகின்றது.

அந்த வகையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது. (202)

# நாட்டின் முன்னேற்றத்திற்கான முதலீடே 'சார்க்' மாநாட்டுக்கு ஏற்படும் செலவு

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 29

'சார்க்' மாநாட்டிற்கு ஏற்படும் செலவை நாட்டிற்கான ஒரு முதலீடாகக் கருதும் மனப்பாங்கும் பக்குவமும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இன்னும் ஏற்படவில்லை. இம்மாநாடு மூலம் இலங்கை அடையவுள்ள நன்மைகளை அறிந்திருந்தும் ஐ.தே.கட்சி வீண் விதண்டாவாதம் பேசுகின்றது.

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம குற்றஞ்சாட்டியுள்ளார்.

'சார்க்' மாநாட்டை முன்னிட்டு உலப்பனை மஹவிலயத்தையில் நிர்மாணிக்கப்பட்ட சார்க் நட்புறவுக் கிராமம் நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது. இதனை வைபவரீதியாகத் திறந்துவைத்த அமைச்சர் அங்கு நடந்த கூட்டத்தில் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டுவது போன்று நாட்டில் பிரச்சினையுள்ள வேளையில் சார்க் மாநாடு நடைபெறவில்லை. நாட்டில் பயங்கரவாதம் தோற்கடிக்கப்படும் வேளையில்தான் இம்மாநாடு நடைபெறுகின்றது. ஜனநாயகம் நிலை நிறுத்தப்படும் வேளை மாநாடு நடைபெறுகின்றது. தற்போது இராணுவம் வடக்கில் முன்னேறிவருகின்றது.

சார்க் பிராந்தியம் சர்வதேச ரீதியில் அதிக சந்தை வாய்ப்பையும், கணிசமானளவு சனத்தொகையையும் கொண்ட பிராந்தியம் என்ற அடிப்படையில் உலகில் முக்கியத்துவம் பெறுகின்றது.

சார்க் நட்புறவுக் கிராமம் சார்க் மாநாட்டின் திருப்புமுனையாக அமையும். சார்க் நாடுகளிடையே நிலவும் வீடற்றவர் பிரச்சினையைத் தீர்க்க முன்னெடுக்கக்கூடிய அணுகுமுறையையும் சார்க் நட்புறவுக் கிராமம் எமக்குக் கற்றுத்தருகின்றது.

சார்க் மாநாட்டின்மூலம் இலங்கைக்குக் கிடைக்கும் தலைமைப் பதவியால் நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும் - என்றார்.

இந்நிகழ்வில் அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, கீதாஞ்சன குணவர்தன மற்றும் சார்க் நாட்டுத் தூதுவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (சி)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலக கட்டடப் பணிகள்

நவாலி, ஜூலை 29

வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத்திற்கான வேலைகள் தற்போது மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் முதலாவது கட்டமாக 7 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202- 100)

## வேலணைப் பிரதேசத்தில் கோழிகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 29

வேலணைப் பிரதேசத்தில் கோழிகள் திருட்டுப் போகும் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன.

குறிப்பாக வேலணை, செட்டிப்புலம் வீதியிலுள்ள வீடுகளிலேயே இத் திருட்டு அதிகமாக இடம்பெறுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஊரடங்கு வேளைகளில் மின் கம்பிகளுக்குச் சைக்கிள் 'செயின்' எறிந்து மின்சாரத்தை நிறுத்திவிட்டே இந்தத் திருட்டு இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202)

## தடைதாண்டற் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 29

இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

பொதுமுகாமைத்துவம் மற்றும் தாபனச் செயற்பாடுகள், நிதி ஒழுங்குக் கோவை, கல்விச்சட்டம் ஆகிய பாடங்களில் பரீட்சை நடத்தப்பட உள்ளது.

மும்மொழிகளிலும் இப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் அடுத்த மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னர் 'பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்திரமுல்லை' என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதிக்கு ஏழு நாள்களுக்கு முன்னர் அனுமதி அட்டை கிடைக்காதவர்கள் பரீட்சை ஆணையாளருக்கு உடன் அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை 25.07.2008 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம்.

## படங்கள் தரும் பதிவுகள்.....



'கரித்தாஸ் - கியூடெக்' நிறுவனம் பருத்தித்துறை சுப்பர்மடத்தில் தேசிய ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் நடத்திய தொழில் மேம்பாட்டிற்கான பயிற்சி நெறியில் பங்குபற்றிச் சான்றிதழ் பெற்ற இளைஞர், யுவதிகள், நிறுவன இயக்குநர் அருட்பணி சி.யோ.ஜெயக்குமார் அடிகளார், வளவியலாளர்களுடன் காணப்படுகின்றனர். (218)




சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தில் இடம்பெற்ற 'ஒரு புத்தகம், ஒரு சமுதாயம்' என்னும் நிகழ்வில் நூலாசிரியர் கௌரவிப்பும் நடைபெற்றது.

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகமும், நூலக அபிவிருத்திச் சபையினரும் இணைந்து நடத்திய இந்த நிகழ்வில் லயன்ஸ் கழக செயலாளர் லயன் கா.இராசதுரை நூலாசிரியர் "கவிமாமணி" கல்வயல் வே.குமாரசாமிக்குப் பொன்னாடை போர்த்தி மாலை அணிவிப்பதைப் படத்தில் காணலாம். பிரதேச சபைச் செயலாளர் வே.சிவராஜலிங்கமும் படத்தில் உள்ளார். (படம்:தென்னவன்)



குடத்தனை அமெரிக்கன் - இலங்கை மிசன் திருச்சபையின் கிறிஸ்து நற்தூதுப் பணியகத்தால் நடத்தப்படும் கல்வி வளாகத்தில் கல்வி பயின்று ஜி.சீ.ஈ.சாதரணதரப் பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்விலே செலிங்கோ இன்சூரன்ஸ் நிறுவன நெல்லியடிக் கிளையின் முகாமையாளர் ரி.நிறோஜன் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:குடத்தனைச் செய்தியாளர்)

இலங்கை சமுர்த்தி அதிகார சபையால் அனுசரிக்கப்பட்ட புகைத்தல் எதிர்ப்பு வாரத்தை முன்னிட்டு காரைநகர் சமுர்த்தி வங்கி நடத்திய நிகழ்வில் காரைநகர் மேற்கு கிராம சேவையாளர் கா.குலசேகரம் மாதிரி சிகரெட்டினை எரியூட்டுவதைப் படத்தில் காணலாம்.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.த.ஜெயசீலனும் படத்தில் காணப்படுகின்றார். (250)





உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு இணுவில் வட கிழக்குக் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் சி.மகாலிங்கத்தின் தலைமையில் இணுவில் தியேட்டர் [illegible] நிறுவனங்கள் இணைந்து மேற்கொண்ட சிரமதானத்தின்போது எடுக்கப்பட்ட படம். (படம்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழர் தேசிய சிதைப்புக்கு மறுபெயர் மனிதாபிமானமா?

ஈழத் தமிழர் தாயகம் மீது கொடூர யுத்தம் ஒன்றைக் கட்டவிழ்த்து விட்ட முன்னைய சந்திரிகா அரசு, அந்தப் போர் குறித்து விநோதமான - விபரீதமான - கோட்பாடு ஒன்றையும் வியாக்கியானம் செய்து முன்வைத்தது.

'சமாதானம்' என்ற உன்னத இலட்சியத்தை அடைவதற்கு போர் என்ற 'அழிவு' நடவடிக்கை அவசியமாகின்றது என்ற அடிப்படையில் 'சமாதானத்திற்கான போர்' என்ற விபரீதக் கோட்பாட்டை சந்திரிகா முன்வைத்தபோது அந்தக் கருத்தியல் வித்தையை சர்வதேச நாடுகள் அப்படியே அப்போது விழுங்கிக் கொண்டன.

அதேபோன்ற பிறிதொரு 'கயிறை' இப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் திரிக்கின்றார். அதையும் சர்வதேசம் விழுங்கிக் கொள்ளுமா என்பதே இன்றைய கேள்வி.

கொடூரப் பேரழிவையும், போரழிவையும் தரும் மோசமான யுத்தம் ஒன்றைத் தமிழர் தாயகம் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கும் அவர், இது யுத்தமே அல்ல என்று அடித்துக் கூறுகின்றார். 'பயங்கரவாதிகளின்' பிடியிலிருந்து வடக்கு மக்களை விடுவிக்கும் 'மனிதாபிமான நடவடிக்கைதானாம் இது.' பல்லாயிரக் கணக்கான துருப்புகள், டாங்கிகள், 'மல்றிபரல்கள்', பீரங்கிகள், பல டசின் குண்டு வீச்சு விமானங்கள் ஆகியவற்றுடன் கடற்படை, விமானப்படை, இராணுவம், பொலிஸ், ஊர்காவல் படை மற்றும் துணைப் படைக் குழுக்கள் என எல்லாப் பாதுகாப்புப் பலத்தையும் ஒருங்கு சேர தமிழர் தாயகம் மீது பாய விடுத்துக் கொண்டு வெகு 'ஸிம்பிளாக' இது யுத்தமேயில்லை என்று பிரகடனப் படுத்துகின்றார் நாட்டின் தலைவர்.

அவர் ஏவி விட்டிருக்கும் கொடூர - குரூரமான - கோர - யுத்தத்தின் பேரழிவிலிருந்து அப்பாவி மக்களை மீட்பதற்கான - காப்பாற்றுவதற்கான - மனித நேயப் பணிகள் குறித்து அவசரமாகவும், அவசியமாகவும் சிந்திக்க வேண்டிய இத்தருணத்தில் அப்படித் தமிழர் தாயகம் மீது தாம் தொடுத்திருக்கும் கொடூர யுத்தத்தையே 'சமுதாயத்தை மீட்பதற்கான மனித நேயப் பணியாக' சித்திரிக்க முயலும் நாட்டின் தலைவர் குறித்து அழுவதா, சிரிப்பதா என்று தெரியாமல் விசனப்படுகின்றார்கள் தமிழர்கள்.

ஓர் அந்நிய எதிரிக்கு எதிரான யுத்தத்தை, அந்நிய தேசத்தில் கட்டவிழ்த்து விட்டிருப்பது போல, தமிழர் தாயகம் மீது இலங்கை அரசு போர் தொடுத்திருக்கின்றது என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் கடந்த வாரம் நாடாளு மன்றத்திலும் சுட்டிக்காட்டியிருந்தார்.

தமிழர் தாயகம் மீது கண்மூடித்தனமாக ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. வீடு வாசல்கள் மீது இலக்கின்றி விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்கள் கொடூரமாக மேற்கொள்ளப்படுகின்றன. ஆழ ஊடுருவும் அணிகளால் நடத்தப்படும் கிளைமோர்த் தாக்குதல்களில் அப்பாவிகள் உயிரிழக்கின்றனர். இந்நடவடிக்கைகளினால் அப்பாவித் தமிழர்கள் கொல்லப் படுகின்றனர். உடல் சிதறிப் பலியாகின்றனர். அவர்களின் வீடு வாசல்கள், உடைமைகள் நாசமாக்கப் படுகின்றன. லட்சக் கணக்கில் தமிழர்கள் ஏதிலிகளாக இடம்பெயர்கின்றனர். அவர்களின் அன்றாட ஜீவனோபாய முயற்சிகளோ நாசமாக்கப்படுகின்றன. வயிற்றுப் பிழைப்புக்கும் வழியின்றி - வீடு வாசல்களையும், உடைமைகளையும், சொந்த பந்தங்களையும் துறந்து - மர நிழல்களிலும், வெயிலிலும், மழையிலும், குளிரிலும் அல்லாடும் பரிதாப நிலைமை அவர்களுக்கு. உணவு, உடை, சுகாதார நலன் போன்ற அடிப்படை வசதிகள் கூடக் கிட்டாத மனிதப் பேரவலத்துக்குள் தமிழ் மக்கள் இன்று ஆழ்த்தப்பட்டிருக்கின்றார்கள்.

இந்த விடயங்களை விளக்கமாகவும், விவரமாகவும், புள்ளி விவர அடிப்படைகளுடனும் நாடாளுமன்றில் சம்பந்தர் எம்.பி. வெளிப்படுத்தியிருந்தார்.

இத்தகைய கொடூர மனிதப் பேரவலத்துக்குள் தமிழர்களை ஆழ்த்தும் யுத்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையைத் தமிழர் தாயகம் மீது ஏவி விட்ட படியே, அந்தப் பேரவலத்தை ஏற்படுத்தும் கொடூரத்தை 'மனித நேயப் பணி' என்று அர்த்தப்படுத்தி சர்வதேச சமூகத்தின் காதில் பூச்சுற்றுகின்றார் நாட்டின் தலைவர்.

தமிழர்கள் ஒரு தேசிய இனக்கட்டமைப்பாக வாழ்வதற்கான அடிப்படைக் கட்டுமானங்களைத் தகர்த்தெறிந்து, சிதைத்தழிக்கும் கைங்கரியத்தையே தென்னிலங்கைப் படைகள் இப்போது தமிழர் தாயகம் எங்கும் மேற்கொண்டு வருகின்றன என்பது கண்கூடு.

புலிகளின் - 'பயங்கரவாதிகளின்' - பிடியிலிருந்து கிழக்கை மீட்டதாக மார்தட்டும் கொழும்பு அரசு, அந்தத் தமிழர் தாயகப் பூமியை சிங்கள மயப்படுத்தும் நாசகார வேலையை எப்படிக்கட்டவிழ்த்து விட்டுள்ளது என்பது இன்று தமிழர் தேசம் கண்டு விக்கித்துப் போயிருக்கும் விடயம்.

அப்படித் தமிழர் தேசியத்தின் அடிப்படைகளை சின்னாபின்னப்படுத்தும் தனது பௌத்த - சிங்கள ஆக்கிரமிப்புத் திட்டத்துக்கே மஹிந்தரின் அரசு இன்று 'மனிதாபிமான நடவடிக்கை' என்று விநோதப் பெயர் சூட்டிமகிழ்கின்றது.

அதுவே, வன்னியை இலக்கு வைத்த இந்த யுத்த நடவடிக்கையினதும் மைய இலக்கு என்பது இலகுவாக ஊகிக்கத் தக்கதே.

இந்தப் பின்புலத்தில் 'மனிதநேயப் பணி' என்ற பெயரில் மஹிந்தர் முன்னெடுக்கும் யுத்தத்தின் சூட்சுமத்தை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளுமா?

# தமிழகத்து மீனவர்கள் மீது தாக்குதல்களை நடத்திவரும் இலங்கையுடனான தூதரக உறவைத் துண்டிக்க வேண்டும்

## வைகோ வலியுறுத்துகிறார்

இராமேஸ்வரம், ஜூலை 29

தமிழக கடற்றொழிலாளர் மீது தாக்குதல்களை நடத்தும் இலங்கையுடனான தூதரக உறவை இந்தியா துண்டிக்க வேண்டும் என்று தமிழ் நாடு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக கடற்றொழிலாளர்கள் தாக்கப்படுவதை கண்டித்தும் தமிழக கடற்றொழிலாளர்களை பாதுகாக்கத் தவறிய மத்திய மாநில அரசுகளை கண்டித்தும் இராமேஸ்வரத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ம.தி.மு.க. கட்சி சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது. போராட்டத்துக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ தலைமை தாங்கினார். ம.தி.மு.க பொரு ளாளரும், சட்டசபை உறுப்பினருமான மு.கண்ணப்பன் உண்ணாவிரதப் போராட்டத்தினை தொடங்கி வைத்தார்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் வைகோ உரையாற்றியபோது மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றுகையில், அவர் கூறியதாவது:

அடுத்துவரும் தேர்தலில் மத்தியில் அ.தி.மு.க.கூட் டணி ஆதரவு பெற்ற அரசு தான் அமையும்.

அதன்பின்னர் கச்சதீவை மீட்கும் நடவடிக்கையை மேற்கொள்வோம்.

சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலை தடுத்து நிறுத்தவும், கடற்றொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேறவும் அ.தி.மு.க.வும், ம.தி.மு.க.வும் வாளும், கேடயமுமாக முன் நின்று செயல்படுவோம்'' என்றார்.

முன்னதாக உண்ணாவிரதப் போராட்டத்தில் வைகோ ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

உலகத்தில் எந்தவொரு தேசத்திலும், அந்நிய நாட்டு இராணுவத்தால் பாதிப்பு ஏற்பட்டால் எதிரி நாடாக இருந்தால் எச்சரிப்பார்கள். இல்லையேல் எதிர்த்தாக்குதல் நடத்துவார்கள்.

உறவு நாடாக இருந்தால் உறவை முறித்துக்கொள்வதாக அறிவிப்பாளர்கள். ஆனால் உறவு நாடான சிறி லங்கா, இந்த அளவுக்கு தாக்குதல் நடத்தியும் கூட இதுவரை மத்திய அரசால் எந்த எச்சரிக்கையும் விடப்படவில்லை.

### கச்சதீவை மீட்பதுதான் ஒரே வழி

கச்சதீவு ஒப்பந்த சரத்தில் குறிப்பிட்டுள்ளபடி தமிழக கடற்றொழிலாளர்கள் அப்பகுதியில் மீன்பிடிக்கவும், ஓய்வெடுக்கவும், வலைகளை உலர்த்தவும் உரிமை அளிக்கப்பட்டு இருந்தது. இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்த சிறி லங்கா தவறி வருவதால் அந்நாட்டுடனான தூதரக உறவை துண்டிக்க வேண்டும்.



தற்போது இந்திய கடற்படை ஒரு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. நடுக்கடலில் சிறிலங்கா கடற்படையால் தமிழகக் கடற்றொழிலாளர்கள் சுடப் பட்டால்,

அது குறித்து உடனே இந்தியக் கடற்படைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டால், உச்சிப்புளியிலிருந்து இந்திய கடற்படைக்கு சொந்தமான உலங்கு வானூர்தி சென்று காயம் அடைந்த கடற்றொழிலாளரை மீட்டு உடனடியாக திருச்சிக்கு கொண்டு வர ஏற்பாடு செய்வதாக கூறி உள்ளனர்.

சிறிலங்கா கடற்படையினர் தமிழக கடற்றொழிலாளர்கள் மீது சுடுவதை தடுப்பதை விட்டுவிட்டு, சுடப்படுகிற கடற்றொழிலாளர்களுக்கு சிகிச்சையளிக்க முன்வருவது வெட்கக் கேடான செயல். கடற்றொழிலாளர் பிரச்சினைக்கு ஒரே தீர்வு கச்சதீவை மீட்பது தான் - என்றார் அவர். (203)

# 'சார்க்' மாநாட்டை முன்னிட்டு இலங்கைக் கடற்பரப்பில் இந்தியக் கடற்படையின் இரண்டு கப்பல்கள்!

## பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

புதுடில்லி, ஜூலை 29

இலங்கை கடற்பரப்புக்கு அண்மையாக இந்தியக் கடற்படையின் இரண்டு போர்க்கப்பல்கள் நங்கூரமிடப் பட்டுள்ளதாக இந்தியப் பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் தெரிவிக் கின்றன.

இந்த விடயம் தொடர்பாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாவது:

இந்திய கடற்படையின் போர் கப்பல்களான ஐஎன்எஸ் ரண்வீர், ஐஎன் எஸ் மைசூர் ஆகியன சிறிலங்கா கடற் பிரதேசத்திற்கு சமீபமாக நங்கூரமிட்டு நிற்கின்றன.

கொழும்பில் நடைபெறவுள்ள சார்க் மாநாட்டில் கலந்துகொள்ளும் இந்தியப் பிரதமர் மற்றும் உயர் அதிகாரிகளின் பாதுகாப்புக் கருதியே இக்கப்பல்கள் இலங்கைக்குச் சமீபமாக நகர்த்தப்பட்டுள்ளன.

இந்திய கப்பல்கள் இலங்கை கடற் பிரதேசத்திற்குச் சமீபமாக காவல் கடமைகளில் ஈடுபட்டுள்ள போதும் இலங்கை கடற்படையினர் இலங்கைக் கடற்பரப்பில் காவலில் ஈடுபட்டு வருகின்றனர்.

மிகவும் அவசரமான நிலைமைகளிலேயே இந்திய கடற்படையினர் பாதுகாப்புக்கு அழைக்கப்படுவார்கள்.

இலங்கை கடற்படையின் ஆழ்கடல் சுற்றுக்காவல் படகுகள் மற்றும் அதிவேக தாக்குதல் படகுகள் என்பன பாதுகாப்பில் ஈடுபட்டு வருகின்றன.

'சார்க்' உச்சி மாநாடு நிறைவு பெறும் வரை அவை காவலில் ஈடுபட்டு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.என்.எஸ் மைசூர் போர்க்கப்பல் டில்லி- வகையை சேர்ந்த நாசகாரிக் கப்பலாகும்.6,900 தொன் எடை கொண்ட இக் கப்பல் 360 பணியாளர் மற்றும் படை யினரைக் கொண்டது.

அணுசக்தி, இரசாயன, உயிரியல் ஆயுதங்களின் தாக்குதல் சூழ்நிலைகளை இக்கப்பல் சமாளிக்கும் தன்மை கொண்டது.

ஐ.என்.எஸ் ரணவீர் போர்க் கப்பல் ராய்புட் வகையை சேர்ந்த நாசகாரிக் கப்பலாகும்.இக்கப்பலில் சீ சிங் மற்றும் செல்ரக் ரக உலங்குவானூர்திகள் தரித்து நிற்கக்கூடியவை.

இந்தியாவின் தமிழ்நாட்டின் கரையோரத்தின் ராம்நாட் பகுதியில் உள்ள படைத்தளங்களும் உச்ச விழிப்பு நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

இந்திய கடற்படையினரின் இந்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் இலங்கைக் கடற்படையினரும் தமது கடல் கண்காணிப்புக்களை பலப் படுத்தி உள்ளனர்.

இலங்கைக் கடற்படையின் கப்பல் தொகுதியில் ஆழ்கடல் கண்காணிப்பு கப்பல்கள், அதிவேக தாக்குதல் டோரா படகுகள், உட்கரையோர நீருந்து விசைப் படகுகள், அதிவேக பீரங்கிப் படகுகள் என்பவற்றுடன் புதிதாக உருவாக்கப் பட்ட விரைவு நடவடிக்கை படகு தாக்குதல், ஸ்குவாட்ரன் படையினரும் அடங்கியுள்ளதாகக் கடற்படையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். - என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (203)

# 'நியாப்' திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ள குளங்களின் தெரிவை உறுதிப்படுத்தும் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 29

'நியாப்' திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் புனரமைக் கப்படவுள்ள கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட குளங்கள் மற்றும் ஏனைய குளங்களின் தெரிவை உறுதிசெய்வதற்கான கூட்டங்கள் நாளைமறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளன.

காலை 9 மணிக்கு தொல்புரம் கமநல சேவை நிலையத்தில் சங்கரத்தை சம்மே என பிரிவில் உள்ள கொம்புத் தாணைக் குளம், பால்குளம், சங்கரத்தை குளம், ஓடைவாய்க்கால் மற்றும் அராலி சம்மே என பிரிவில் உள்ள கொட்டனை குளம், கொட்டனை வாய்க்கால், பனிப்புலம் பண்ணாகத்திற்கு உட்பட்ட நரசிங்கன் குளம் ஆகியவற்றுக்கான கூட்டம் இடம்பெறும்.

நண்பகல் 11.30 மணிக்கு சண்டிலிப்பாய் கமநலசேவை நிலையத்தில் நவாலி சம்மேளன பிரிவிலுள்ள ஆம்பல் குளம், வேலக்கைகுளம், மானிப்பாய் மேற்கு சம்மேளன பிரிவிலுள்ள ஆம்பல் குளம், வேலக்கைக்குளம், மானிப்பாய் மேற்கு சம்மேளன பிரிவிலுள்ள மருதடி குளம், சுதுமலை கோயில்குளம் என்பவற்றிற்குமான கூட்டங்களும் உடுவில் கமநலசேவை நிலையத்தில் பி.ப. 2.30 மணிக்கு உடுவில் வடக்கு சின்னக் குளம், சங்குவேலி மானிப்பாய் பிரிவிற்குட்பட்ட கேலன் காமம் குளம் ஆகிய வற்றிற்குமான கூட்டங்களும் நடை பெறும்.

இறுதித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட இருப்பதினால் குறிப்பிட்ட குளத்துடன் தொடர்புடைய அனைவரையும் இந்தக் கூட்டத்தில் கலந்து பயன்பெறுமாறும் கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தெரிவித்துள்ளார்.

# ஆடி அமாவாசையன்று கீரிமலை சென்று பிதிர்க்கடன் தீர்க்க அனுமதி

யாழ்ப்பாணம், ஜூலை 29

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு ஆடி அமாவாசை தினத்தன்று சென்று வழிபடவும் பிதிர்க்கடன்களைச் செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆடி அமாவாசை தினமான எதிர்வரும் வெள்ளிக்கிழமை அதிகாலை நகுலேஸ்வரப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம் பெறும். தொடர்ந்து சுவாமி ரிஷபாரூபராக எழுந்தருளி கண்டகி தீர்த்தம் நடை பெறும்.

சுவாமி பிற்பகல் 2 மணிவரை தீர்த்த மண்டபத்தில் எழுந்தருளி அடியவர்களுக்கு அருள்பாலிப்பார். அடியார்கள் கண்டகி தீர்த்தமாடி தங்கள் மூதாதையர்களை நினைவுகூர்ந்து எள்நீர்இறைத்து, தானதர்மங்கள் செய்து ஆலயத்தில் நடை பெறும் விசேட பூசைகளில் பங்கு பற்ற முடியும்.

பிதிர்க்கடன்களைத் தீர்க்க ஆலயத்திற்குச் செல்லும் அடியார்களின் வசதி கருதி தெல்லிப்பழை சோதனைச் சாவடியிலும், சேந்தான்குளம் சோதனைச் சாவடியிலும் ஒழுங்குகள் செய் யப்பட்டுள் ளன.

சோதனைச் சாவடிகளில் இருந்து பஸ்சேவைகள் நடத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. நெய், தீபம், அர்ச்சனைப் பொருள்கள் அனைத்தையும் ஆலய வளாகத்தில் பெற்றுக் கொள்ள முடியும். (203)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 15 | 30.07.2008 |
| | புதன்கிழமை |
| திதி: | திரயோதசி |
| | மு.இ. 08.52 வரை |
| நட்சத்திரம் : | திருவாதிரை |
| | மு.இ. 09.44 வரை |
| சுபநேரம் : | 04.33 - 06.03 |
| ராகுகாலம் : | 12.03 - 01.33 |

## குருதிக் கொடையாளர்கள் உயிர்காக்கும் உத்தமர்கள்



* குருதி வழங்குநர் பிரகடனப் பத்திரம் பூர்த்தி செய்தல்: 5-10 நிமிடம்
* வைத்தியப் பரிசோதனை: 10 - 15 நிமிடம்
* பதிவு செய்தல்: 5 - 10 நிமிடம்
* குருதி வழங்கல்: 10 - 15 நிமிடம்
* ஓய்வும் நீராகாரம் அருந்தலும்: 10 நிமிடம்
* விசேட உணவு உட்கொள்ள வேண்டிய அவசியமில்லை.
* கடினமற்ற நாளாந்த வேலைகளில் அன்றே ஈடுபடலாம்.
* அன்று கடின வேலைகள், கனரக வாகனம் ஓட்டுதல் தவிர்க்கப்பட வேண்டும்.

*இரத்தவங்கி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.*
*021 222 3063*

குருதிக் கொடையாளர் கௌரவிப்பு விழா-02.08.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

வீட்டுக்குத் தேவையான தீராந்திகள், ஓடுகள், மரங்கள், கதவுகள், நிலைகள், யன்னல் நிலைகள் மற்றும் பொருள்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 127, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம், (மக்கள் வங்கி அருகில்). (76698)


## மரண அறிவித்தல்

### கந்தையா நடராசா

(பாரிஸ்டர், லண்டன், வழக்கறிஞரும், வருமான வரி ஆலோசகரும், இலங்கை)

வட்டுக்கோட்டை கிழக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவரான கந்தையா நடராசா நேற்று (28.07.2008) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை கந்தையா - இரத்தினம்மா தம்பதியரின் மகனும் கமலா தேவியின் அன்புக் கணவரும் சியா (சியாமளா), ரவீந்திரன், இரத்தினசிவா ஆகியோரின் அன்புத் தந்தையும் தவம் (ஸ்ரீஸ்கந்ததாஸ்), சர்மிளா ஆகியோரின் அன்பு மாமனாரும் துவாரகாவின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற அன்ன லக்ஷ்மி, கண்மணி, முத்துக்குமாரசாமி மற்றும் வெள்ளி யம்பலம் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரது பூதவுடல் நாளை (30.07.2008) புதன் கிழமை காலை 8.30 மணிக்கு இல 11/2, ஸ்கூபீல்ட் பிளேஸ், கொழும்பு (03) இல் உள்ள அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு பொரளை கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.11/2, ஸ்கூபீல்ட் பிளேஸ், கொழும்பு - 03. (சி/553938)
தகவல்: சியாமளா (மகள்).


## MOTOR CAR விற்பனைக்கு

W.P. JT XXXX MARUTI 800
மோட்டார்கார் விற்பனைக்கு உண்டு.
விபரங்களுக்கு:
0777570092 அல்லது 222 3081
தொலைபேசிகளுடன் தொடர்பு கொள்ளவும்.

## விற்பனைக்கு

வெஸ்பா (VESPA) விற்பனைக்குண்டு. (மோட்டார் சைக்கிள்) இல:-81 ஸ்ரீ XXXX நல்ல நிலையில்உள்ளது. விலை ரூபா 40,000/=
தொடர்பு:
விளம்பர இல:- 3120
மே/பா உதயன் யாழ்ப்பாணம். (சி/553936)

## காணி தேவை

நன்னீர்,மின்சாரம் போன்ற வசதிகளுடன் குறைந்த விலையில் காணி, தோட்டக்காணிகள் உடன் தேவை.
தொடர்பு:
T.P.: 0041762870708 (SMS),
0041 774232223 (SMS). (சி/553941)

## மகளிருக்கான 3 நாள் அழகுக்கலை பயிலமர்வு

அடிப்படை முக அழகுக்கலை (Basic Facial) இந்து கிறிஸ்த்வ மணப்பெண் அலங்காரம், மடிசார் குஜராத்தி, கூர்க்காஸ், சிங்கப்பூர் முறைகளிலான சேலை அணிவிக்கும் முறைகள் என்பன எதிர்வரும் 1ம், 2ம், 3ம் நாட்களில் (வெள்ளி, சனி, ஞாயிறு, காலை 9.00 மணிமுதல் பி.ப. 2.00 மணிவரை போதிய விளக்கங்களுடனும் குறிப்புகளுடனும் இடம்பெறவுள்ளன வகுப்புகளில் பங்குபற்றியமைக்கான சான்றிதழும் வழங்கப்படும். பயிற்சிக்கட்டணம் மற்றும் மேலதிக விவரங்களை இன்றிலிருந்து எதிர்வரும் வியாழன் பி.ப 2 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

கலாலயா
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.


## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை29

நல்லூர்பிரதேச கலாசாரப் பேரவையின்கூட்டம்நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

கல்வி அபிவிருத்தி.....

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்பாடசாலையில் கடமையாற்றுகின்ற உப அதிபரது சேவையினைப் பாராட்டி 2005ஆம் ஆண்டு நமநாட்டின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் தீவக வலயத்தினுள் "சிறந்த சிறப்பு ஆசிரியர் விருது" வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இப்பாடசாலையில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சில முக்கிய விடயங்களை உப - அதிபர் பட்டியல் படுத்தினார்.

*வகுப்பறைகளைப் பிரித்து சுவர்கள் கட்டாமையால் மாணவரது கவனம் மற்றய வகுப்பினைப் பார்த்தல் மற்றும் கற்றல் உபகரணங்களை உரிய முறையில் காட்சிப்படுத்த முடியாமையும், பிற மாணவர்களது கவனம் குழப்பமடைதல்.

*மழை காலங்களில் அண்மித்துள்ள குளம் நிரம்பி மேலதிக மழை நீர் பாடசாலை வளவினுள் நிற்றல், அக்காலப் பகுதியில் மாணவர்களது புற அலகுச் செயற்பாடுகள் தடைப்படுதல்.

*மழைநீர் சேமிப்பதற்கான நீர் சேமிப்புத் தாங்கி அமைக்கப்படுதல்.

*பிரதான வடக்கு நோக்கிய வீதியினால் மின்சார கம்பங்களும், இணைப்பும் உள்ள நிலையில் பாடசாலைக்கான மின்சார இணைப்பினை பெறமுடியாதுள்ளது. காரணம் அதற்கான அடிப்படை மின்இணைப்பு பொருத்துதல் தொடர்பான வேலைகளைப் பூரணப்படுத்தி அதற்கான இணைப்பினைப் பெறுவதற்குப் போதிய நிதிவளம் இன்மை.

*புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்ற உறவுகளினது தொடர்பாடலை மேம்படுத்தி பழைய மாணவர்சங்கத்தினை மீளக்கட்டியெழுப்புதலும், அதனூடாக உணர்வூட்டி அடிப்படை வசதிகளை மேம்படுத்தல்.

* மாணவர்களது வரவுகளில் ஏற்படும் ஒழுங்கற்ற தன்மையினைப் பேணுவதற்கு பெற்றோர் பொறுப்புரிமை உடையவர்களாகவும், கல்வியினது முக்கியத்துவம் பற்றிய அடிப்படை விழிப்புணர்வினைப் பெறும் வகையிலான உணர்வூட்டல் பயிற்சி வகுப்பினை நடத்தி அவர்களது எண்ணக்கருத்தில் மாற்றத்தினை உருவாக்குதல்.

*இந்து சமயம் தவிர்ந்த ஏனைய மதப் பிள்ளைகளினது சமயசார் பாடவிதானங்களைக் கற்பிக்கக்கூடிய ஆசிரிய ஆளணியினைப் பெற்றுக் கொள்ளல்.

*சிறப்பு வினாத்தாள்களைப் பெற்று புலமைப்பரிசில் பரீட்சைகளில் எதிர்காலத்தில் இப்பாடசாலை மாணவர்களையும் சித்தியடையச் செய்தல்.

*பாடசாலைத் தோட்டத்தினை உருவாக்கி அதிலிருந்து பெறுகின்ற மரக்கறி வகைகளினை மாணவர்களது சத்துணவிற்கான பயன்பாட்டிற்கு மாற்றீடு செய்தல்.

*பாடசாலை இரு மருங்கிலும் நிழல் மரங்கள், கற்பகதரு, தென்னை போன்ற கன்றுகளை நாட்டி நீண்டகாலத் தேவையின் அடியான ஓர் வளமான பசுமை நிறைந்த சோலையாகப் பாடசாலை சூழலை உருவாக்கல்.

இவ்வாறான இனங்காணப்பட்ட திட்ட முன்மொழிவுகளைப் புலம் பெயர்ந்த பழைய மாணவ உறவுகள், தொடர்புடைய அரசசார்பற்ற நிறுவனங்கள், அரசதிணைக்களங்கள், அமைச்சுக்கள் நிறைவேற்ற முன்வரவேண்டுமெனவும் இப்பாடசாலை ஓர் முன்மாதிரியான பாடசாலையாக பரிணமிக்க சகலரும் ஒத்துழைக்க வேண்டுமெனவும் பாடசாலைச் சமூகம் எதிர்பார்த்து நிற்கிறது.

*****************

# கண்ணீர்க் காணிக்கை



## அமரர் பூலோகசிங்கம் வெற்றிவேலு
(முன்னாள் அதிபர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு தனது ஆசிரிய சேவைக்காலம் முழுவதையும் அர்ப்பணித்து 1970 முதல் 1984 வரை 14 ஆண்டு காலம் இந்துவின் புகழ்பூத்த அதிபராகவும் இந்துவின் சிற்பியாகவும் விளங்கி 27.07.2008 அன்று அமரத்துவம் அடைந்த எமது முன்னாள் அதிபர் அமரர் பூலோகசிங்கம் வெற்றிவேலு அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு கண்ணீர் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரை நினைவு கூருமுகமாக நாளை (30.07.2008) புதன்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள் தலைமையில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற இருப்பதால் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி. (சி/553940)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷியா யாத்திரிகர்களின் வாகன அணி மீது பக்தாத்தில் தற்கொலைத் தாக்குதல்!

## 25 பேர் சாவு; 70பேர் காயம்

பக்தாத், ஜூலை 29

ஈராக்கிய தலைநகரான பக்தாத்தில் நேற்று திங்கட்கிழமை, ஷியா முஸ்லிம் யாத்திரிகர்களின் வாகன அணியை இலக்கு வைத்து, பெண் தற்கொலைக் குண்டுதாரிகள் மேற்கொண்ட குண்டுத்தாக்குதல்களில் 25 பேர் கொல்லப்பட்டனர். 70 பேர் வரை காயமடைந்தனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

இந்த ஷியா முஸ்லிம் யாத்திரிகர்கள், வருடாந்த மார்க்க வைபவங்களில் கலந்து கொள்வதற்காக, பக்தாத்துக்கு வடக்கேயுள்ள கடிமியா புனித ஸ்தலத்தை நோக்கிப் பயணித்தவர்களாவர் என பொலிஸ் அதிகாரி ஒருவர் ஊடகத்துறைக்குத் தெரிவித்தார்.

இவர்கள் பயணித்த வாகன அணி, மத்திய காராடா மாவட்டத்துக்கு ஊடாக சென்று கொண்டிருந்தபோது, பெண் தற்கொலையாளிகளின் குண்டுத் தாக்குதல்களுக்கு இலக்கானது என நகர பொலிஸ் வட்டாரம் மேலும் விவரித்தது.

பெண் தற்கொலைக் குண்டுதாரிகளாலேயே திங்கட்கிழமை, இக் குரூர தாக் குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. பலியானோரில் பெரும்பாலானோர் பெண்களும் பிள்ளைகளுமாவர் என, பாதுகாப்பு வட்டாரமும், வைத்தியசாலை வட்டாரமும் ஏ.எப்.பி. செய்தி முகவர் நிறுவனத்திடம் தெரிவித்தன.

எட்டாம்-நூற்றாண்டின் இமாம் மூஸா அல்-கடிமின் மறைவை யொட்டி, வருடாந்தம் அனுஷ்டிக்கப்படும் இவ்வைபவங்கள், ஷியாக்களின் புனித ஸ்தலமான கடிமியாவில், நடைபெறுகின்றன. ஷியாக்களால் பெரிதும் போற்றப்படும் இமாம் இவராவார்.

கடிமியாவில், இம்முறை நடைபெறும் இவ்வைபவங்கள் இன்று செவ்வாய்க் கிழமை உச்ச கட்டத்தை அடையும். இதில் 10 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பங்கு பற்றக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது என புனித ஸ்தல வட்டாரம் தெரிவித்தது.

### தலிபான் போராளிகளின் முயற்சி முறியடிப்பு

காபூல், ஜூலை 29

பாகிஸ்தான் எல்லைக்கு அருகிலுள்ள சிறிய ஆப்கான் நகரைக் கைப்பற்ற தலிபான் போராளிகள் முயன்றார்கள். எனினும் இவர்களின் முயற்சி சாதுரியமாக முறியடிக்கப்பட்டுவிட்டது என ஆப்கான் அரச அதிகாரிகளும், நேட்டோ படை அதிகாரிகளும் தெரிவித்தார்கள்.

“போராளிகள் பொலிஸாரை நோக்கி, துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். எறி குண்டு வீச்சில் ஈடுபட்டார்கள். ரொக் கெட் தாக்குதல்களும் நடத்தினார்கள். இச் சமயம் பொலிஸாரால் நேட்டோ படைக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. நேட்டோ படைகள் விரைந்து வந்து, துரிதமாக செயற்பட்டன என உள்ளூர் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

# உக்ரைன், ரொமேனியாவைத் தாக்கிய உக்கிர புயல்காற்றில் சிக்கி 26 பேர் பலி!

இவானோ, ஜூலை 29

கடும்மழையோடுகூடிய புயல்காற்று மேற்கு உக்ரைனையும், வட ரொமேனியா வையும் கடந்த இரு நாள்களாகத் தாக்கி யது. பல இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்த அனர்த்தத்தில் 26 பேர் பலியாகியுள்ளனர். ஆயிரக் கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளி யேறியுள்ளார்கள் என ஊடகச் செய்திகள் தெரிவித்தன.

பலியான 26பேரில், 22 பேர் உக்ரைனில் பலியாகியுள்ளனர். இவர்களில் ஐந்து சிறார்களும் அடங்குவர். எல்லைப் புறத்தின் இரு பக்கங்களிலுமுள்ள நூற்றுக் கணக்கான நகரங்கள், கிராமங்கள் ஆகிய வற்றுக்கான மின் விநியோகம் துண்டிக்கப் பட்டு விட்டது. வெள்ளப்பெருக்கால் அநேக பாலங்கள் சேதமடைந்துள்ளன என்றும் அச்செய்திகள் குறிப்பிட்டன.

“உக்ரைனில், இடைவிடாத அடை மழையால், புரூட் நதியிலும், டினிஷ்டர் நதியிலும் கரைகளை மேவி வெள்ளம் விரைகிறது. வெள்ளத்தால் 21 ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன. எண்ணாயிரத்துக்கு மேற்பட்டோர் வீடுகளை விட்டு வெளிவேறி விட்டனர்” என்று அவசர காலச் சேவை அமைச்சு தெரிவித்தது.

### வடரொமேனியாவில்

வடரொமேனியாவில், இருநூறுக்கு மேற்பட்ட கிராமங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. 9,000 பேர் மீட்கப்பட் டுள்ளனர். பல பகுதிகளில் விமானங்கள் மூலம் வான்வழியாக அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன. கடும் புயலால் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏறத்தாழ 20 ஆயிரம் மக்கள் பாதிப்புக்குள்ளானார்கள் என ரொய்ட்டர் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

# துருக்கித் தலைநகரில் குண்டுவெடிப்புகள் 16 பேர் மரணம்; 150பேர் வரை படுகாயம்

இஸ்தான்புல், ஜூலை 29

துருக்கியின் தலைநகரான இஸ்தான்புல்லில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரு குண்டு வெடிப்புகளில், 16 பேர் கொல்லப்பட்டனர். 154 பேர்வரை காயமடைந்தனர். இவை பயங்கரவாதிகளின் தாக்குதல்களாக இருக்கலாம் என அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

மக்கள் நடமாட்ட மிகுந்த கன்கொரின் குடியிருப்புப் பகுதியில், குப்பைத் தொட்டிக்குள் முதல் குண்டு வெடித்தது. மக்கள் கூடியிருந்த பிறிதொரு இடத்தில் இரண்டாவது குண்டு வெடித்தது என அப்பகுதிக் குடியிருப்பாளர்கள் தெரிவித்தார்கள்.

குண்டுகள் வெடித்ததும் மக்கள் அவ்விடங்களில் பதறி ஓடினார்கள். அநேகரின் காயங்களிலிருந்து இரத்தம் வழிந்தோடிக் கொண்டிருந்தது என சம்பவங்களை நேரில் கண்டவர்கள் ஊடகவியலாளர்களிடம் கூறினார்கள்.

இவ்விரு குண்டுத் தாக்குதல்களுக்கும் இதுவரை எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் உரிமைகோரவில்லை. இச்சம்பவ அனர்த்தங்கள் அரச தொலைக் காட்சியில் காட்டப்பட்டன. அநேகர் ஒரு வீதியில் இரத்த வெள்ளத்தில் கிடந்தார்கள். விரிப்புகளில் கிடத்திப் பலர் உடனுக்குடன் அம்புலன்ஸ் களில் ஏற்றப்பட்டார்கள். தொலைக்காட்சியில் இந்நிகழ்வு காட்டப்பட்டது.

“இவை பயங்கரவாதிகளின் தாக்குதல்களேயாகும். சந்தேகமில்லை. இயன்றவரை பலத்த உயிர்ச் சேதங்களை விளைவிக்க வேண்டுமென்ற நோக்கில், பயங்கரவாதிகளே இவற்றை நடத்தியுள்ளார்கள்” - என இஸ்தான்புல் ஆளுநர் மொமர் குலர் பின்னர் தெரிவித்தார்.

“வங்கிக்கு முன்னால், மக்கள் வந்து சேர்ந்த பின்னர், குப்பைத் தொட்டியில் முதல் குண்டு வெடித்தது. சில நிமிடங்களுக்கு பின்னர், சிறு தொலைவில் மற்றொரு குண்டு, குப்பைத் தொட்டிக்குள் வெடித்தது” - என, அருகிலுள்ள பாதணி விற்பனைக் கடை உரிமையாளர் ஹூஸைன் சென்டோர்க் ஏ.பி.செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

பி.கே.கே. என்னும் பிரிவினைவாத குர்திஷ் தீவிரவாத போராளிகளின் இலக்குகளை, சமீப நாள்களாக, துருக்கியப் படைகள் தொடர்ச்சியாகத் தாக்கி வருகின்றன. இதற்குப் பழிவாங்கும் பொருட்டு, குர்திஷ் போராளிகள் இத் தாக்குதல்களை நடத்தியிருக்கலாம். அவர்களின் உபாயத்தையே இவை பிரதிபலிக்கின்றன என பொலிஸ் வட்டாரம் குறிப்பிட்டது.

# செவ்வாய்க் கிரக மண்ணை சோதனை செய்வதில் சிக்கல்!

கலிபோர்னியா, ஜூலை 29

செவ்வாய்க் கிரக நிலப்பரப்பில் இருந்து மண் வெற்றிகரமாக எடுக்கப்பட்டாலும் அதைச் சோதனை செய்து பார்ப்பதற்கான கருவியில் கோளாறு ஏற்பட்டுள்ளது. செவ்வாய்க் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாஸா, போனிக்ஸ் மார்ஸ் என்ற விண்வெளி ஓடத்தை செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பியது. இந்த விண்வெளி ஓடத்தில் உள்ள ‘ரேபோடி’க் கருவி மூலம் செவ்வாய்க் கிரக நிலப்பரபில் உள்ள மண் வெட்டி எடுக்கப்பட்டது.

இந்த மண்ணை ஆய்வு செய்வதற்காக விண்வெளி ஓடத்திலேயே ஆய்வுக் கருவி உள்ளது. இந்த கருவியில் கோளாறு ஏற்பட்டதால் எடுக்கப்பட்ட மண்ணை ஆய்வு செய்ய முடியவில்லை. 3 கியூபிக் சென்ரி மீற்றர் மண்ணை எடுத்து ரோபோடிக் கருவி மூலம் அதைப் பரிசோதனைக் கருவியில் இடும்போது மண் சரியாகப் போடப்படவில்லை. இதனால் பரிசோ தனைக் கருவி செயல்படவில்லை. இதைச் சரி செய்ய விஞ்ஞானிகள் முயற்சி செய்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தான் உளவு அமைப்பின் தன்னாட்சி அதிகாரம் பறிப்பு

## அந்நாட்டு அரசு அதிரடி நடவடிக்கை

இஸ்லாமாபாத், ஜூலை 29

பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ். ஐயின் தன்னாட்சி அதிகாரம் பறிக்கப்பட்டுள்ளது. இனி உள்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் அது செயல்படும்.

பாகிஸ்தான் சுதந்திரம் பெற்ற பிறகு அந்நாட்டை இராணுவம் தான் அதிக காலம் ஆட்சிசெய்துள்ளது. இதற்கு, உடந்தையாக அந்நாட்டு இராணுவ உளவுப் பிரிவும், தன்னாட்சி அதிகாரத்துடன் செயற்பட்டு வந்த ஐ.எஸ்.ஐ. எனப்படும் உளவுத்துறையும் இருந்த வந்துள்ளன. இந்தியாவுக்கு எதிராக காஷ்மீர் பயங்கரவாதிகளைத் தூண்டியும், ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு ஆதரவாகவும் ஐ.எஸ்.ஐ. செயற்பட்டு வருகின்றது எனக் குற்றச்சாட்டப்பட்டு வருகின்றது.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இந்தியத் தூதரகத்தின் மீது நடந்த தாக்குதலுக்கு தலிபான்களும், ஐ.எஸ்.ஐயும் பின்னணியாக இருந்ததாக அந்நாட்டு ஜனாதிபதி ஹமீத் கர்சாய் கருத்துத் தெரிவித்திருந்தார். ஹமீத் கர்சாயை கொல்லத் திட்டமிட்டுள்ள தலிபான்களுக்கு ஐ.எஸ்.ஐ. ஆதரவு அளிக்கிறது என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

பல்வேறு விடயங்களில் பாகிஸ்தான் அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்தி வரும் ஐ.எஸ்.ஐயையும், அந்நாட்டு அரசையே உளவு பார்க்கும் இராணுவ உளவுத் துறையையும், உள்துறை அமைச்சகத்தின் கீழ் கொண்டு வருவது குறித்த அவசரம் சட்டம் பிறப்பிக்ககப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம்முதல் ஐ.எஸ்.ஐ., மற்றும் இராணுவ உளவுத்துறையின் நிர்வாக நடவடிக்கைகள், செயல்பாடுகள், நிதி உள்ளிட்ட விடயங்கள் அனைத்தும் இனி உள்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் என பாகிஸ்தான் பிரதமர் கிலானி தெரிவித்துள்ளார். இதற்கான சட்டபூர்வ அறிக்கையும் வெளியிடப்பட்டிருக்கிறது. பாகிஸ்தான் அரசின் இந்த நடவடிக்கை யை எதிர்க் கட்சிகளும் ஆதரித்துள்ளன. இருப் பினும் உயர் அதிகாரிகள் மட்டத்தில் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.




# செப்.11இல் சம்பியன் தொடரை ஆரம்பிப்பதற்குக் கடும் எதிர்ப்பு

கராச்சி, ஜூலை 29

சம்பியன் கிண்ணத் தொடர், சர்ச்சைக்குரிய செப்டெம்பர் 11ஆம் திகதி தொடங்குவதற்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இதையடுத்து ஒரு நாள் தாமதமாக செப்டெம்பர் 12இல் தொடர் தொடங்கும் எனத் தெரிகிறது.

எதிர்வரும் செப்டெம்பரில் பாகிஸ்தானில் சம்பியன் கிண்ணத் தொடர் (மினி உலகக் கிண்ணம்) நடக்கவுள்ளது. பாதுகாப்புப் பிரச்சினைகளை கடந்து இத்தொடரைப் பாகிஸ்தானில் நடத்த ஐ.சி.சி. அனுமதி அளித்தது.

போட்டி நடத்துவதற்கு அனுமதி கிடைத்த மகிழ்ச்சியில் இருந்த பாகிஸ்தானுக்கு இன்னொரு சிக்கல் ஏற்பட்டுள்ளது. இப்போட்டி செப்டெம்பர் 11ஆம் திகதி தொடங்க இருந்தது. இந்த நாளில்தான் 2001இல் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம் பயங்கராவாதிகளால் தகர்க்கப்பட்டது. எனவே தொடங்கும் நாள் சரியில்லை என ஐ.சி.சி. உறுப்பினர்கள் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதையடுத்து ஒரு நாள் தாமதமாக செப்டெம்பர் 12இல் போட்டி தொடங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்தரப் பரீட்சை அனுமதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தபாலகத்தில் இருந்து அனுப்பப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை-

பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் பாடசாலையில் இடம்பெறும் என்று யாழ்.வலயப்பணிப் பாளர் தெரிவித்தார். (அ-01)

## 1,200 வெலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில்வா,நீதியரசர்கள் ஷிராணி திலகவர்த் தனா, கே.ஸ்ரீபவன் ஆகியோர் முன்னிலை யில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

அச்சமயமே வெலிக்கடைச் சிறையில் 1200 தமிழ்க் கைதிகள் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் விவரத்தைப் பிரதம நீதியரசர் வெளியிட்டார்.

இக்கைதிகள் சம்பந்தமாக வழக்குகளைக் கையாள்வதற்காக வெலிக்கடைக்குள் ஒரு தனியான நீதிவான் நீதிமன்றும் மேல் நீதிமன்றும் இயங்குகின்றன.

இந்த நீதிமன்றங்களில் இக்கைதிக ளின் நலன்பேண உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று உத்தரவிட்ட பிரதம நீதியரசர் இதற்கான ஆலோசனை வழிகாட்டல்களையும் வழங்கினார்.

* வெலிக்கடையில் இயங்கும் நீதி வான் நீதிமன்றில் பணிபுரிவதற்குத் தமிழ்த் தெரிந்த பொலிஸார் நியமிக்கப்படவேண்டும்.
* அந்த நீதிமன்ற விடயங்களில் ஈடு படுவதற்கு அரச சட்டத்தரணி ஒருவர் நிய மிக்கப்படவேண்டும்.
* இந்த வழக்கின் (அடிப்படை உரிமை மீறல் மனுவின்) மனுதாரர்கள் (இ.தொ. காவினர்) வெலிக்கடையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிக ளின் விடயங்கள் வெலிக்கடை நீதிமன் றில் எடுக்கப்படும்போது அக்கைதிகளின் சார்பில் அந்த நீதிமன்றத்தில் ஆஜராகி, அவர்களுக்காக வாதாட சட்டத்தரணி. களை ஒழுங்கு செய்யவேண்டும்.
* வெலிக்கடையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள தமிழ்க் கைதிகளில் சட்ட நட வடிக்கைகள் எடுப்பதற்காகச் சாட்சியங் களும் அடிப்படைகளும் உள்ளவர்களைத் தவிர ஏனையோரை அடையாளம் கண்டு அவர்களை விரைந்து விடுவிக்க நட வடிக்கை எடுக்கப்படவேண்டும்.

- இவ்வாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

தலைநகரிலும், சுற்றுப்புறங்களிலும் தமிழர்கள் தொல்லைப்படுத்தப்படுவது குறித்து ஆராய்வதற்கு உயர்நீதிமன்றத் தின் பணிப்பின்பேரில் ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டிருப்பது குறித்து மனு தாரர்கள் (இ.தொ.காவினர்) பரப்புரைக ளைச் செய்து, அக்குழு குறித்து மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என்றும் -

அப்படி மக்களுக்கு அறிவுறுத்தினால் தங்களுக்கு ஏற்படுத்தப்படும் அனாவசியத் தொந்தரவு குறித்து இக்குழு ஊடாக நிவா ரணத்தையும் பாதுகாப்பையும் பெற்றுக் கொள்ள மக்கள் முயற்சிப்பர் என்றும் - பிர தம நீதியரசர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் வீடுகளில் வதிவோர் பற் றிய குடும்பப் பதிவைச் செய்வதற்கான விண்ணப்பப் பத்திரம் சட்டமா அதிபரால் தயாரிக்கப்பட்டிருப்பதாக நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

இப்படிவங்களை மூன்று மொழியிலும் அச்சிட்டு, சுற்று நிருபமாக சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கும் படி பொலிஸ்மா அதிபருக்கு உயர்நீதிமன் றம் பணித்தது.

இந்தப் படிவங்கள் செயன்முறைக்கு வந்தால் மக்கள் தேவையின்றி பொலிஸ் நிலையங்களில் வரிசையாகக் காத்துக் கிடத்தல், கிராமசேவையாளரின் சான்றிதழ் களுக்கு அலைதல் என்பன இல்லாமல் போகும் என்றும் நீதிமன்றத்தில் தெரி விக்கப்பட்டது.

மனுதாரர்களான இலங்கைத் தொழிலா ளர் காங்கிரஸ் சார் பில் சிரேஷ்ட சட் டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் நீதிமன் றில் ஆஜரானார். (அ-சி)

நாளை ஆரம்பம்
கருத்தரங்கு
தமிழ்
திரு.குழந்தை
30.07.2008, 31.07.2008
காலை 9மணி
வெளிமாணவர்களுக்கும் அனுமதி வழங்கப் படுகின்றது.
கட்டணம் 200/=
விக்னா
கல்வி நிறுவனம்.
தலைமையகம்:-
52,ஸ்ரான்லி வீதி, யாழ்.

SHAMROCK CUP - 2008
மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டி
ஆரம்பம்:- 06.08.08 9மணி
வயதெல்லை-15முதல்18வரை
முடிவுத்திகதி
03.08.08 பி.ப 3மணி
தொடர்பு: SHAMROCK
எச்மோட்டை வீதி, யாழ்.

## தேவன்பிட்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் இருவர் படுகாயமடைந்தனர். பொது மக்களின் குடியிருப்புகள் மீது ஷெல்கள் தொடர்ச்சியாக வீழ்ந்து வெடித் ததால் ஏரா ளமான வீடுகள் நாசமடைந்திருக்கின்றன என்று அங்கிருந்து கிடைக் கும் தகவல்கள் தெரிவித்தன.

இச்சம்பவத்தில் வி.செல்வகுமார் என் பவர் உயிரிழந்தார். வி.தோமஸ் (வயது - 26), நந்தரூபன் ஆகியோர் படுகாயமடைந்த னர். அவர்கள் வைத்தியசாலையில் சிகிச் சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

ஏற்கனவே விடத்தல் தீவு, இலுப்பைக் கடவை பகுதிகளை இராணுவம் கைப் பற்றியிருப்பதால் அங்கிருந்து இடம்பெயர்ந்து தேவன்பிட்டிப் பகுதி களுக்குச் சென்று தங்கியிருந்த கணிசமான மக்கள், இப் போதைய ஷெல் தாக்குதல் காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்து வேறு பகுதி களுக்குச் செல்கின்றனர். (அ-சி)

## இனங்காண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் வலி.வடக்கு பிரதேச செயலர் எஸ்.முரளிதரனும் சிரேஷ்ட படையதிகாரி களும் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்ட ஆரம்பத்தில் குழுவின் தலைவர் மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா-

உயர் நீதிமன்றத்தின் கட்டளைப்படி இந்த உயர்மட்டக் குழு நியமிக்கப்பட்டுள் ளது. உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள உத் தரவுக்கு ஏற்ப வலி.வடக்கில் மீளக்குடி யமர விரும்புபவர்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கவேண்டும் -

இந்த செயற்பாடுகளை பரந்த மனப் பான்மையுடனும் வெளிப்படைத் தன்மை யுடனும் அர்ப்பணிப்புடனும் முன்னெடுத்து உயர் நீதிமன்ற கட்டளையை நிறைவேற்ற வேண்டும் - என்று குறிப்பிட்டார்.

பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படாத வகை யில் இந்தச் செயற்பாடுகளை முன்னெடுக்க பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கூட்டத்தில் குறிப்பிட்டார்.

தளபதியின் கருத்தை வரவேற்பதாகத் தெரிவித்த நீதிபதி, உயர் நீதிமன்றத்திலும் நீதித்துறையிலும் மக்கள் வைத்துள்ள நம் பிக்கைக்கு பங்கம் ஏற்படாத வகையில் குழு செயற்பட வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டினார்.

பாதுகாப்பு விடயங்களில் சம்பந்தப் பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு இந்த விடயத்தில் நெகிழ்ச்சித் தன்மை யுடன் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி கூறி னார்.

மீள் குடியமர்வு தொடர்பான வழக்கு மீண்டும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி உயர்நீதி மன்றத்தில் எடுக்கப்படவிருக் கிறது. அதற்கு முன்னர் மீள் குடியமர்வு தொடர்பான நடவடிக்கையை உயர் மட் டக்குழு எடுக்கவேண்டும் என்று நீதிபதி எடுத்துரைத்தார்.

அரச அதிபரால் இனங்காணப்பட்டு உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கை யில் குறிப்பிட்டவர்களின் இடங்களை அந்த அந்தப் பிரதேச கட்டளைத் தளபதி யுடன் இணைந்து வலி.வடக்கு பிரதேச செயலர் இனங்கண்டு எதிர்வரும்23 ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஒகஸ்ட் 23 ஆம் திகதி உயர்மட்டக் குழு கூடி பிரதேசசெயலர் தயாரிக்கும் அறிக் கையின் அடிப்படையில் மக்களை மீளக் குடியமர்த்தும் நட வடிக்கையை முன் னெடுப்பது என் றும் -

மீள்குடியமர்வின் முன்னேற்றம்குறித்து உயர் நீதிமன்றத் துக்கு அறிக்கை சமர்ப்பிப்பது என் றும் - முடிவு செய் யப்பட்டது. (அ-1)

மாதிரிப் பரீட்சை - 2008
வணிகக்கல்வி
வணிகக்கல்வி - I
29.07.2008 Tue 2-5 pm
வணிகக்கல்வி - II
30.07.2008 Wed 2-5 pm
By.V.K. ரவிகரன் B.Com
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

லிகிதர் தேவை
மானிப்பாய், ஆனைக்கோட்டை ஆகிய கிராமங் களுக்குள் இயங்கிவரும் பிரபல்யமான தனியார் கல்வி நிலையத்திற்கு லிகிதர் தேவை!
* Computer Typing தெரிந்தவர்களுக்கும் ஆண்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:- TP- 021 2224031, Mobil 077 4014317

# தேசியமட்ட விளையாட்டுப் போட்டி திகதி அட்டவணை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

தேசிய மட்டத்திலான பாடசாலைக ளுக்கிடையிலான போட்டிகள் நடை பெறும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்தப் போட்டிகள் மூன்று கட்டங்க ளாக கொழும்பில் இடம்பெறவுள்ளன.

முதலாம் கட்டமாக பெருவிளையாட் டுகள் செப்ரெம்பர் 6, 7, 8 ஆம் திகதிகளிலும் -

இரண்டாம் கட்டமாக பெருவிளையாட் டுகள் 11, 12, 13,ஆம் திகதிகளிலும் -

மூன்றாம் கட்டமாக மெய்வன்மைப் போட் டிகள் 24முதல் 28ஆம் திகதி வரையும் - இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண மட்டத்தில் தெரிவாகும் அணி கள் இந்தப் போட்டிகளில் பங்கு பற்றும்.

வடக்கு மாகாண மட்ட போட்டிகள் எதுவும் இதுவரை நடைபெறவில்லை என் பது குறிப்பிடத்தக்கது. (அ -01)

## பாலமோட்டையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரவுடன் முன்நகர்வினை மேற்கொண்டனர்.

இம்முன்நகர்வுக்கு எதிராக விடுத லைப் புலிகள் தீவிர எதிர்த்தாக்குதலை மாலை 4.45 மணிவரை நடத்தி படையி னரை அவர்களின் பழைய நிலைகளுக்கு விரட்டி யடித்துள்ளனர். இதில் ஐந்து படையினர் கொல்லப்பட்டனர்; ஏழுபடை யினர் படுகாயமடைந்துள்ளனர் என்று புலிகள் தரப்பு தெரிவித்துள்ளது. (சி)

## உயர்தரப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற கூட்டத்தில் இந்த உறுதி மொழி படைத்தரப்பினால் வழங்கப்பட் டுள்ளது.

காங்கேசன்துறையில் நேற்று முற்பகல் இடம்பெற்ற கூட்டத்தில் மேலதிக மாகா ணக் கல்விப்பணிப்பாளரும் ஐந்து கல்வி வலயப் பணிப்பாளர்களும் முப் படைகள் மற்றும் பொலிஸ் பகுதிகளின் மூத்த அதி காரிகளும் கலந்துகொண்டனர்.

மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை கள் தொடர்பாக வலயக்கல்விப் பணிப் பாளர்கள் எடுத்துக் கூறினர்.

பரீட்சையை முன்னிட்டு படைத்தரப் பில் மேற்கொள்ளவிருக்கும் ஏற்பாடுகள் வருமாறு:-

* பரீட்சையை சீராக எந்த விதப் பிரச் சினைகளும் இன்றி நடத்துவதற்கு நடவ டிக்கை எடுக்கப்படும்.
* அடையாள அட்டைகளுடனும், பாடசாலை சீருடையுடனும் பரீட்சைக்கு வரும் மாணவர்கள் சோதனை நிலையங் களில் காத்திருக்க வேண்டியதில்லை. அவர்கள் உடனுக்குடன் சோதனை செய்து பயணத்தை தொடர்வதற்கு அனு மதிக்கப்படுவர்.
* பரீட்சை ஆரம்பிக்கும் நேரமான காலை 8.30மணிக்கு முன்னர் மாண வர்கள் பாடசாலைக்கு செல்ல வசதியாக சகல பாதைகளிலும் வாகன அணிகள் நிறுத்தப்படும். காலை 9மணிக்கு பின்னரே வாகன அணி இடம் பெறும்.

இதே போல் மாலை வேளையிலும் பரீட்சை முடிவடையும் நேரத்திலும் வாகன அணி இடம்பெறாது. (அ-01)

## கனடா கார் விபத்தில் யாழ்.பொறியியலாளர் மரணமானார்

ரொண்டோ, ஜூலை 29

கனடாவில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற கார்விபத்து ஒன்றில் யாழ்.நகரைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் மரணமானார்.

அங்கு பொறியியலாளராகப் பணிபுரிந்த ஸ்.சந்திரகாந்தன் (வயது 45) என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழ்.இந்துக்கல்லூரியில் 74 - 79 ஆண் டுக் காலப்பகுதியில் கல்வி பயின்ற இவர், கிரிக்கெட், உதைப்பந்தாட்டம், மெய்வன் மைப் போட்டிகளில் பங்கேற்று சிறந்த வீரராக விளங்கினார்.

அவரது இறுதிக்கிரியைகள் நாளை கனடா வில் இடம் பெறவுள்ளன.

இவர் இருபிள்ளைகளையும், மனைவியை யும் விட்டுப் பிரிந்துள்ளார். (அ-01)

## நெடுந்தீவில் இன்று 'கோப் சிற்றி' திறப்புவிழா

நல்லூர், ஜூலை 29

நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கத்தின் 'கோப் சிற்றி' திறப்பு விழா இன்று மு.ப 10மணிக்கு இடம் பெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் சி.தில்லையம்ப லம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் நெடுந்தீவு உதவி அரச அதிபர் என்.திருலிங்கநாதன் 'கோப்சிற்றி'யை திறந்து வைப்பார். (1-111)

## சுகாதார திணைக்களத்தின் கண்காணிப்புக் குழு கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்.சுகாதார திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரசசார்பற்ற நிறுவனங்களுக்குமானமாவட்ட கண்காணிப்புக் குழு கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.30மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (1)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
"யுனிலங்காஸ்" நாட்காட்டி.
32.சென் அன்ரனீஸ் மாவத்தை.
கொழும்பு - 13

இணைந்து நடாத்தும்!!
வெற்றித் தேர்வு மாபெரும் கருத்தரங்கு - 2008
வெற்றித்தேர்வு திருமலை.எஸ்.கணேசலிங்கம். அவர்களின்
(ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர். திருகோணமலை.)
இம்முறை தரம்:5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான
விசேட செயலமர்வும், கருத்தரங்கும்.

கலந்து கொள்ளும் வளவாளர்கள்:
திரு. எஸ்.கணேசலிங்கம். (உதவிக் கல்விப் பணிப்பாளர். திருகோணமலை)
கலாநிதி .செ.திருநாவுக்கரசு. (சிரேஸ்ட விரிவுரையாளர். கோப்பாய் ஆசிரிய கலாசாலை)
திரு.நா.சுவாமிநாதன். (முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர். விரிவுரையாளர்)
திரு.சரா.புவனேஸ்வரன். (விரிவுரையாளர்)
திரு.கே.தவயோகராஜா. (யாழ் முன்னணி ஆசிரியர். சாவ. இந்து.ஆர. பாடசாலை)

| செயலமர்வு நடைபெறும் இடங்கள் | காலம் |
| --- | --- |
| இளங்கலைஞர் மன்றம். சட்டநாதர் வீதி. நல்லூர். | 02.08.2008 சனி காலை: 8.30 முதல் 2.30 வரை |
| துரைஜயா மண்டபம். நவாலி வீதி. ஆனைக்கோட்டை. | 03.08.2008 ஞாயிறு காலை: 8.30 முதல் 2.30 வரை |
| வடமராட்சி தெற்கு,மேற்கு பிரதேசசபை மண்டபம். மாலுசந்தி. நெல்லியடி. | 04.08.2008 திங்கள் காலை: 8.30 முதல் 2.30 வரை |

மேலதிக தொடர்புகளுக்கு 021 2222877

செயலமர்வின்போது மாவட்டநிலை 30 முதன்மை மாணவர்களுக்கு உதயன் மெச்சி வழங்கும் பரிசும், பெறுமதிமிக்க சான்றிதழும் உங்களுக்காக!!
அனுமதி அட்டைகளை சகல புத்தகசாலைகளிலும் இன்று பெற்றுக்கொள்ளலாம். வெற்றித்தேர்வு பெறும்பாடசாலைகள். உடன் இவ்விலக்கத்துடன் தொடர்பு கொள்க.
யாழ் மாவட்டம்: 021229016, 0773126807 வடமராட்சி: 0212263815 வலிகாமம்:0773151474
மாதிரி வினாத்தாள், கையேடு,செய்முறைப்பத்திரம் என்பன வழங்கப்படும். கையேடு வெளியில் பெறமுடியாது.
இதுவரை நடைபெற்ற வெற்றித்தேர்வு பரீட்சை வினாப்பத்திரங்கள் நுழைவாயில்ல் பெறமுடியும்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.07.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org